வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 23.06.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 196 | பக்கங்கள் : 16




## புலிகளுடன் தொடர்புடையவருக்கு ரெலிக்கொம்மை விற்கிறார் ரணில்

### சபையில் குறிப்பிட்டார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 23

ஜனாதிபதி லண்டன் சென்று, ரெலிக்கொம் நிறுவனத்தை புலிகளுடன் தொடர்புடைய தமிழர் ஒருவருக்கு விற்பனை செய்ய பேச்சு நடத்தி யுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் 15

## யாழ். மாணவியரின் பாதுகாப்புக்கு விசேட நடைமுறைகள் அறிமுகம்!

### மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் ஏற்பாட்டில்

ந. குகராஜ்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்டத்தில் பாடசாலை மாணவிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு புதிய நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் பதின்ம வயதினர் மீதான குற்றங்களை குறைக்கும் நோக்கில் இந்த நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். 15

# அதிகாரப் பகிர்வுக்கான தீர்வை தமிழரிடம் முன்வைத்துள்ளோம்!

## லண்டனில் ஜனாதிபதி தெரிவிப்பு

- அரைவாசி பிரச்னைகளை தீர்த்துவிட்டோம்
- தமிழர் முன்னேற்றத்துக்காக உழைப்பேன்
- செப்ரெம்பருக்குள் கடன் மறுசீரமைப்பு

லண்டன், ஜூன் 23

**தமிழ் மக்களின் பிரச்னை விடயங்களில் அரைவாசிக்கு நாம் தீர்வு கண்டுவிட்டோம். இறுதியாக அதிகாரப் பகிர்வை செய்வதற்கான சாத்தியமான தீர்வுகளை தமிழ் கட்சிகளிடம் முன்வைத்துள்ளோம். ஜூலை இறுதிக்குள் தீர்வுக்கான விரிவான செயல்முறைகளை ஆரம்பிப்போம் - இவ்வாறு லண்டனில் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.** 15




## ரணிலுக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்து

நியூயோர்க், ஜூன் 23

2006ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் பிரான்ஸ் நாட்டின் ஏ. சி. எவ். நிறுவன பணியாளர்களான 17 பேரை படுகொலை செய்தது. இந்தப் படுகொலைக்கு இன்றுவரை நீதி வழங்கப்படவில்லை. எனவே, அதற்கான விசாரணையை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்த வேண்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 15

## யாழ். நூலகத்தை எரித்த ஐ. தே. கவினருக்கு எதிராக ரணில் எடுத்த நடவடிக்கை என்ன?

### இராதகிருஷ்ணன் எம். பி. சபையில் கேள்வி

கொழும்பு, ஜூன் 23

தனது நூலகத்தில் இருந்த மூவாயிரம் புத்தகங்கள் எரிக்கப்பட்டன என்று ரணில் விக்கிரமசிங்க நீலிக்கண்ணீர் வடிக்கிறார். ஆனால், யாழ்ப்பாணம் நூலகத்தை ஐக்கிய தேசிய கட்சியினர் எரித்தமைக்கு எதிராக கட்சியின் தலைவராக இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசியாவின் 15

## பயங்கரவாதத் தடைச் சட்டம் இலங்கைமீது கோர் குழு கவலை

ஜெனிவா, ஜூன் 23

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து இலங்கைமீது கோர் குழு கவலை தெரிவித்துள்ளது.

கனடா, மலாவி, மொண்டெனேகுரோ, வடக்கு மசிடோனியா, இங்கிலாந்து, அமெரிக்காவை உள்ளடக்கிய இலங்கை தொடர்பான கோர் குழுவே இந்தக் கவலையை எழுப்பியுள்ளது.

ஐக்கிய இராச்சிய மனித உரிமைகள் தூதுவர் ரீட்டா பிரெஞ்ச், ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது அமர்வின்போது, காணி மீள வழங்குதல், நீண்டகால தடுப்புக்காவல் மற்றும் ஊழல் தொடர்பான கவலைகளை நிவர்த்தி செய்வதற்கான இலங் கையின் ஆரம்ப நடவடிக்கைகளை கோர் குழு வரவேற்கிறது என்று கூறினார்.

"இந்த நடவடிக்கைகள் 15

## சீனாவுக்குப் பறக்கிறார் அடைக்கலநாதன் எம். பி.



கொழும்பு, ஜூன் 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதன் நாளை சீனா பயணமாகிறார்.

இலங்கை - சீனா பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் அழைப்பின் பேரில் அவர் உட்பட 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் சீனா செல்கின்றனர். இந்த பயணக் குழுவில் இடம்பெற்றுள்ள ஒரே யொரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் இவராவார்.

(விரிவான செய்தி பக்கம் - 05இல்)

## ஜனாதிபதி ரணிலுக்கு பிரான்ஸிலும் எதிர்ப்பு

பாரிஸ், ஜூன் 23

பிரான்ஸுக்கு நேற்று சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தலைநகர் பாரிஸில் தமிழ் மக்கள் திரண்டு எதிர்ப்பு வெளியிட்டனர்.

புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கை உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி இமானுவல் மக்ரோனின் அழைப்பின்பேரில் அங்கு சென்றார். இதன் போதே தமிழ் மக்கள் எதிர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.

உடன்படிக்கை மாநாடு நடைபெற்ற இடத்துக்கு அண்மையிலேயே இந்தப் போராட்டம் 15

## மக்களை வறுமைக்கு தள்ளியோர் ஆட்சியில் நீடிப்பது பாரதூர நிலை!

### ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஜூன் 23

நாட்டு மக்கள் தொகையில் 31 வீதமானவர்களை வறியவர்களாக மாற்றிய அரசாங்கம் தொடர்ந்தும் நாட்டை ஆட்சி செய்வது மிகவும் பாரதூரமான நிலைமை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

2019ஆம் ஆண் டில் நாட்டில் 30 இலட்சம் மக்கள் வறுமை கோட்டின் கீழ் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# வினைத்திறனற்ற அதிகாரிகளை பதவி நீக்குமாறு அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஜூன் 23

மேல், தென் மாகாணங்களில் கொலைகள் மற்றும் குற்றங்கள் அதிகரித்தமைக்கு அந்த மாகாணங்களின் பொலிஸ் அதிகாரிகளின் வினைத்திறனற்ற செயல்பாடுகளே காரணம். அவ்வாறானவர்களை பதவி நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளை அழைத்து நேற்று முன்தினம் கலந்துரையாடிய போதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக, பொலிஸ்மா அதிபர் விக்ரமரத்ன, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், தென் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஜீவ மெதவத்த, பொலிஸ் விசேட செயலணியின் கட்டளையிடும் அதிகாரி வருண ஜயசுந்தர உள்ளிட்ட தரப்பினர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

கொலை சம்பவங்கள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு, அமைச்சர் டிரான் அலஸ் இதன்போது பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அனுமதிப்பத்திரமின்றி அல்லது அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத துப்பாக்கிகளை பொலிஸில் ஒப்படைப்பதற்காக ஜூலை 31 ஆம் திகதி வரை பொதுமன்னிப்புக் காலத்தை அறிவிக்குமாறும் அதன் பின்னர் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் கொலைக் குற்றங்கள் அதிகரித்துள்ளமைக்கு, அந்த மாகாணங்களின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் வினைத்திறனற்ற செயல்பாடுகளே காரணம் என பொலிஸ்மா அதிபர் இதன் போது சுட்டிக்காட்டினார். அவ்வாறான அதிகாரிகளை உடனடியாக நீக்கி, பொருத்தமான அதிகாரிகளை நியமிக்குமாறும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

# மின்சாரம் தாக்கியதில் தாயும் மகனும் மரணம்!

கொழும்பு, ஜூன் 23

மின்சாரம் தாக்கித் தாயும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்தனர். இந்த துயரச் சம்பவம் கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

45 வயதுடைய தாயாரும் 22 வயதுடைய மூத்த மகனுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

வீட்டில் பழுதடைந்த குளிர்சாதன பெட்டியை மூத்த மகன் திருத்திக்கொண்டிருக்கும்போது தாயார் அருகில் இருந்துள்ளார். இதன் போது மின்சாரம் தாக்கி இருவரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர்.

தந்தையும் இளைய மகனும் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தமையால் இந்த அனர்த்தத்தில் அவர்கள் சிக்கவில்லை. எனினும், வீட்டுக்கு வந்து சம்பவத்தை நேரில் பார்த்து அதிர்ச்சியடைந்த 48 வயதுடைய தந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

20 வயதுடைய இளைய மகனை விசாரணைக்கு உட்படுத்தி அவரிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பன்றிநெல் களை தாக்கம் விவசாயிகளுக்கு விளக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

நெல் செய்கையில் தாக்கத்தை விளைவிக்கும் பன்றி நெல் எனும் களையின் தாக்கம் தொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் அளவெட்டி பினாக்கை பகுதியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.



தெளிவூட்டும் நிகழ்வில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன் மற்றும் விவசாய போதனா ஆசிரியர்கள் அளவெட்டி பகுதியை சேர்ந்த நெல் செய்கையாளர்கள் கலந்து கொண்டனர். நெல் செய்கையாளர்களுக்கு பன்றி நெல் களையால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக பினாக்கை வயல் வெளிப்பகுதியில் விளக்க உரைகள் வழங்கப்பட்டது. (ஐ-03)

# கட்டுநாயக்கா விமான நிலையத்தின் 2ஆவது முனைய நிர்மாணம் ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 23

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் நிர்மாண பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில், ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன என்றுதுறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்ட போது, குறித்த இரண்டாவது முனையத்தை நிர்மாணிப்பதற்காக ஜப்பானின் ஜெய்கா நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடனும் இடைநிறுத்தப்பட்டதால் கட்டுமானப் பணிகளை நிறுத்த நேரிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



சித்தன்கேணி - துரட்டிப்பானை தலங்கைமங்கை குளம் புனரமைக்கப்பட்டு யாழ்ப்பாணம் கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் திருமதி தெய்வநாயகி பிரணவனால் நேற்று திறந்து வைக்கப்பட்டு, மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

# சமுர்த்தியில் உள்வாங்கப்படாதோர் மன்னாரில் 2ஆம் நாளாக போராட்டம்!

மன்னார், ஜூன் 23

நலன்புரி நன்மைகள் சபையால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட மற்றும் உள்வாங்கப்படாத பயனாளிகள் நேற்று வியாழக்கிழமை காலை முதல் 2ஆவது நாளாகவும் மன்னார் பிரதேச செயலகம் முன்பாக கவன வீர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.



நலன்புரி நன்மைகள் சபையால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் பணம் வசதி உடைய மற்றும் மாடி வீடுகளில் வசிப்பவர்களும் உள்வாங்கப்பட்டு இருக்கின்றனர். ஆனால், தேவையுடைய மாற்றுத்திறனாளிகள், விதவைகள், சிறுநீரக நோயாளிகள், சொந்த வீடு இல்லாதவர்கள் உட்பட பலரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை என்றும் குறித்த பட்டியல் பொருத்தமற்றது எனவும் தெரிவித்து குறித்த போராட்டத்தை 2ஆவது நாளாகவும் முன்னெடுத்திருந்தனர்.

நாட்டில் ஏற்கனவே பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சஜித் பிரேமதாஸவின் வீட்டுத் திட்டத்தால் கடனாளிகளாக உள்ளனர் என்றும் இன்னும் பல பெண்கள் நுண் நிதி நிறுவனங்களில் கடன் பெற்று வாழும் இவ்வாறான நிலையில் சமுர்த்தி கொடுப்பனவு பட்டியலில் தங்கள் பெயர் நீக்கப்பட்டமை தங்களை ஏழ்மையில் தள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் வேலை எனவும் கூறியே போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் சந்தித்து புதிய நடைமுறை தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். எனினும், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு; டயானாவை கைது செய்ய கோரிக்கை!

கொழும்பு, ஜூன் 23

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கொழும்பு பிரதான நீதிவான் கோரியுள்ளார்.

நீதிமன்றில் விசாரணையில் உள்ள வழக்கு ஒன்று தொடர்பில் சமூக ஊடகங்களில் அறிக்கை வெளியிட்டதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக கொழும்பு பிரதான நீதிவான் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

தனக்கெதிரான வழக்கின் தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்னர் முறைப்பாட்டாளர் பணம் பெற்றுக் கொண்டார் என்று டயானா கமகே ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தமை நீதிமன்றில் தெரியவந்தது. (ஐ)

# நீர் வழங்கல் துறையை டிஜிற்றல் மயமாக்க திட்டம்!

கொழும்பு, ஜூன் 23

பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச முதலீடுகள் மற்றும் நீர்வழங்கல் துறையை டிஜிற்றல் மயமாக்குதல் தொடர்பான விசேட கலந்துரையாடல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் பங்கேற்புடன் நடைபெற்றது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், முதலீட்டு சபை அதிகாரிகள், கொழும்பு துறைமுக நகர் ஆணையாளர், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் உட்பட துறைசார் அதிகாரிகள் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

கொழும்பில் துரித கதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகருக்கு நீர்வழங்கலின் போது முழுமையாக டிஜிற்றல் முறைமையை பயன்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

“நீர்வழங்கல் அதிகார சபை கடந்த காலங்களில் நட்டத்தில் இயங்கி வந்தாலும் அதனை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றியமைப்பதே எனது இலக்கு. அதற்கேற்ற வகையில் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, துறைமுக அபிவிருத்தி நகருக்கு நீர் வழங்கலின்போது எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்காக திட்டம் வகுக்கப்படுகின்றது.” என இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இதனையடுத்து நீர்வழங்கல் அமைச்சும், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் இணைந்து ஒரு குழுவை நியமிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.06.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# யார் தமிழ் மக்களின் எதிரிகள்?

தமிழ்த் தேசிய அரசியல் முன்னேற்றங்கள் எதுவுமின்றி வழமைபோலவே ஊர்ந்து செல்கின்றது. ஊர்ந்து செல்கின்றதென்று கூறுவதுதான் சரியான சொல்லாகும் - அந்தளவுக்கு நிலைமைகள் மோசமடைந்தே செல்கின்றன. யுத்தம் நிறைவுற்று 14 வருடங்களாகிவிட்டன. இந்தக் காலத்தில் பயன்படுத்தி சொற்களும் பரப்பப்பட்ட நமபிக்கைகளும் அலாதியானவை - ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளால் ஓர் அடிகூட முன்னோக்கி நகர முடியவில்லை. சர்வதேச அழுத்தங்களை அதிகரியுங்கள் - தமிழர்மீது கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலை ஒன்று அரங்கேறிக் கொண்டிருக்கின்றதென்று - ஒப்பாரி வைத்த போதிலும் உலகத்தின் கடைக்கண் பார்வை தமிழர்மீது திரும்பவில்லை. இதுவரையில் திரும்பாத அவர்களின் பார்வை இனியும் திரும்புமென்று வாதிடுவதில் அர்த்தமில்லை.

ஏன் இவ்வாறானதொரு நிலையென்று கேள்வி எழுப்பினால் ஒரு கட்சி இனனொரு கட்சிமீது குற்றம் சாட்டுவதே தமிழர் பக்க வாதமாக இருக்கின்றது. உண்மையில், மக்களின் நோக்கில் அனைவருமே குற்றவாளிகள்தான். ஏனெனில், விடயங்களை சாதகமாகவும் தந்திரோபாயமாகவும் கட்சிகள் கையாளவில்லை. முக்கியமாக கடந்த 14 வருடங்களில் ஆகக் குறைந்தது தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்துமாக ஒன்றிணைந்து தேர்தல் அரசியலுக்கு அப்பாலான ஐக்கிய முன்னணி ஒன்றை கட்டியெழுப்ப முடியவில்லை. உண்மையில், அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஐக்கிய முன்னணியாக எழுச்சியுறுமாக இருந்தால் இராஜதந்திர சமூகம் தமிழர் பக்கம் திரும்புவதை தவிர்க்க முடியாது. ஏனெனில், இலங்கையில் இரண்டு அரசியல் முகாம்கள் இருக்கின்றன. ஒன்று சிங்கள அரசியல் முகாம் அடுத்தது, தமிழ் அரசியல் முகாம்.

இந்த அடிப்படையில்தான், மேற்குலகமும் இந்தியாவும் இலங்கையை கையாண்டு வருகின்றன. ஆனால், இந்த இரண்டு முகாம்களில் ஒன்றான தமிழர்கள் மிகவும் பலவீனமானதோர் அரசியலை முன்னெடுத்து வருவதனால் மேற்குலகமும் இந்தியாவும் தமிழர் முகாமை ஒரு தரப்பாக கையாளவில்லை - கையாள்வதற்கு விரும்பவுமில்லை. 1980களுக்கு பின்னரான சூழலில், இந்தியா தமிழர்களை ஒரு தனி முகாமாகவே கையாண்டது.

அதனடிப்படைலேயே இலங்கை தொடர்பான கொள்கை நிலைப்பாட்டை முன்னெடுத்தது. ஆனால், இன்றோ தமிழர்களை வெறுமனே சிறுபான்மை என்னும் நிலையிலேயே கையாள்கின்றனர். இந்தியாவின் நிலைப்பாடும் மேற்குலகின் நிலைப்பாடும் கிட்டத்தட்ட ஒன்றாகவே இருக்கின்றது. இதற்கு அவர்களை குற்றஞ்சாட்டுவதில் பயனில்லை. ஏனெனில், தங்களை ஒரு தரப்பாக நிரூபிக்க வேண்டியது தமிழர்களின் பணியாகும். தமிழர்கள் தங்களின் பணியை சரியாக முன்னெடுக்காதபோது மற்றவர்கள் எதற்காக தமிழர்களை நோக்கி திரும்ப வேண்டும்? ஏனெனில், இது நலன்சார் அரசியல் உலகாகும்.

தமிழர்கள் தங்களை ஓர் அரசியல் பலமுள்ள மையமாக திரட்டிக் கொள்ளாத வரையில், தமிழர்களுக்கென்று தனியான அரசியல் இருக்கப் போவதில்லை. அவ்வப்போது மனித உரிமைகள், ஜனநாயகம், 13ஆவது திருத்தச்சட்டம் - இவ்வாறான சொற்களோடு மட்டுமே தமிழரின் அரசியல் சுருங்கிப் போகப் போகின்றது.

இதற்கப்பால் எவருமே தமிழர்கள்மீது, பிரத்தியேக கரிசனைகொண்டு செயலாற்றப் போவதில்லை. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமாயின், தமிழர் தரப்புகள் ஓர் ஐக்கிய முன்னணியாக மாற வேண்டும். இதற்கு குந்தகம் விளைவிப்பவர்கள் அனைவரையும் தமிழர் சமூகம் தேர்தல் மூலம் தோற்கடிக்க வேண்டும். ஐக்கிய முன்னணி உபாயத்தை சீர்குலைத்து தாங்கள் மட்டும் புனிதர்களென்று கூற எவரெல்லாம் முயற்சிக்கின்றார்களோ அவர்களே தமிழ் மக்களின் பரம எதிரிகளாவர்.

# பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று இரத்த தானம் வழங்கப்பட்டது

*வடமராட்சி, ஜூன் 23*

*பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இரத்த தான முகாம் நடைபெற்றது. இதில், பிரதேச செயலகத்தின் ஊழியர்கள் பங்கேற்று குருதிக் கொடை வழங்கினர்.*



*யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த குருதி தான முகாம் நடைபெற்றது. ஊழியர் நலன்புரி சங்க தலைவரும் கிராம அலுவலருமான அ. ரதீஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி மற்றும் உதவி பிரதேச செயலாளர் உட்பட பலர் பங்கேற்று குருதி தானம் வழங்கினர்.*

*பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் குருதிப் பிரிவினர் குருதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.*

*(ஐ-02)*

# புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

*யாழ்ப்பாணம், ஜூன் 23*

*தேசிய கலை இலக்கிய பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பன்னிரண்டாவது நிகழ்வு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று ஆரம்பமாகிறது.*

*இதில், நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறள்ள இரண்டாம் நாள் நிகழ்வு ஈழத்து நூல்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் கவிஞரும் சட்டத்தரணியுமான சோ. தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.*

*நூல் அறிமுக உரைகளை கு. புவிராஜாவின் "சங்கை நகர்" நூல் தொடர்பாக தி.சிவ தட்சணாமூர்த்தி, அழ. பகீரதனின் "ஐப்பசியில்" கவிதைத் தொகுப்பு பற்றி அனற்ஜெனா ஜெறாட், வ. சிவஜோதியின் "என் எண்ண ஓட்டத்தில்..." நூல் தொடர்பாக அராலியூர் நிலா, கணேசபிள்ளை சிவகரனின் "கிராமிய பாடசாலைகளில் பதின்ம வயதினர்" நூல் தொடர்பாக உளவளத் துணையாளர் சங்கமித்தா ஜெயக்குமார் ஆகியோர் ஆற்றவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பை மாணவியரான ரா.புவியழகி, கு.நிரோஜினி ஆகியோர் மேற்கொள்வர்.*

*நூல் அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் சண். நாடகக் குழுவினரின் தயாரிப்பில் மருத்துவப் பேராசிரியர் நந்தியின் சிறுகதையைத் தழுவி, ஆசிரியர் பு.கணேசராசா அவர்களினால் நெறியாள்கை செய்யப்பட்ட "காதலுக்கு மருந்து" நாடகமும் இதேபோல், சண். நாடகக் குழுவினரின் தயாரிப்பில், பு. கணேச ராசாவின் நெறியாள்கையில் உருவான "பச்சை மரமும் படும்" நாடகமும் அரங் கேறும். (ஐ)*

# சாந்தபுரம் கலைமகள் வித்தியில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை!

*கிளிநொச்சி, ஜூன் 23*

*கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் 9 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகிறது என்று பாடசாலை சமூகம் கவலை தெரிவித்துள்ளது.*

*அத்துடன், புதிய ஆசிரியர் நியமனங்களின் போதும் தங்களின் பாடசாலை புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.*


*மிகவும் பின் தங்கிய கிராமங்களில் ஒன்றான சாந்தபுரம் கிராமத்தில் தரம் 11 வரை வகுப்புகள் காணப்படுகின்றன. இங்கு நீண்ட காலமாக 9 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகிறது. புதிதாக மாவட்டத்துக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்ற போதும் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம் புறக்கணிப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.*

*தகவல் தொழில்நுட்ப பாடத்துக்குகு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையால் 20 புதிய கணினிகளை கொண்ட வகுப்பறை பயன்பாடின்றி காணப்படுகிறது. அத்துடன், கணிதம், வரலாறு உள்ளிட்ட முக்கிய பாடங்களுக்கு ஆசியர்கள் நியமிக்கப்படவில்லை.*

*தற்போது கல்வியியல் கல்லூரியில் இருந்து ஆசிரியர் நியமனம் பெற்று நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டபோதும் இந்தப் பாடசாலைக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்றும் பெற்றோரர் சாடினர்.*

*(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 23 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 08

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | பஞ்சமி |




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புஉத்தியோகத்தில் நீங்கள் இழந்த உங்களின் உரிமையை பெறுவீர்கள். இந்த நாள் உங்களுக்கு மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டிய வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்சாதன பொருட்களை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

**மீனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

# இந்தியா - இலங்கை கூட்டு பணிக்குழு கூட்டத்தை உடனடியாகக் கூட்டுங்கள்

## பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து

*சென்னை, ஜூன் 23*

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தர தீர்வு காணும் நோக்குடன் இந்தியா - இலங்கை கூட்டுப் பணிக்குழு கூட்டத்தை உடனடியாகக் கூட்டி சாதகமான முடிவை மேற்கொள்ள மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது வலைதளப் பக்கத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"வங்கக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மற்றும் புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த 22 மீனவர்களை சிங்கள கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய 3 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. இலங்கை கடற்படையினரின் மனிதநேயமற்ற இந்த அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

என்பதை தெரிவித்தும் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்யும்படி இலங்கை நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. அவர்கள் தாயகம் திரும்புவதற்கு முன்பாகவே அடுத்து 22 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தகைய தொடர் அத்துமீறலை அனுமதிக்க முடியாது.

தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் எல்லை மிகவும் குறுகியது. தமிழக கடற்கரையிலிருந்து குறிப்பிட்ட தொலைவு சென்றால்தான் மீன்கள் கிடைக்கும். அவ்வாறு மீன்கள் கிடைக்கும் பகுதிகள் அனைத்தும் தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன் பிடித்து வரும் பகுதிகளாகும். அங்கு சென்று மீன்பிடிக்க தமிழக மீனவர்களுக்கு உரிமை உள்ளது. அதை மதிக்காமல் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்யும் கொடுமைக்கு உடனடியாக முடிவு கட்ட வேண்டும்.

மீனவர் சிக்கல் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களை தீர்ப்பதற்காக இந்தியா - இலங்கை கூட்டுப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இரு தரப்பு மீனவர் சிக்கலை தீர்க்க அந்தக்குழு பல்வேறு பரிந்துரைகளை அளித்தாலும்கூட, அவற்றை இலங்கை அரசு மதிக்காததுதான் அனைத்து பிரச்னைகளுக்கும் காரணமாகும். மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தர தீர்வு காணும் நோக்குடன் இந்தியா - இலங்கை கூட்டுப் பணிக்குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி சாதக மான முடிவை மேற்கொள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றுள்ளது. (ஐ)

# எந்தத் தேர்தலாக இருந்தாலும் அ. தி. மு. கவே கூட்டணி தலைமை!

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்

*சென்னை, ஜூன் 22*

"தமிழகத்தில் சட்டப் பேரவைத் தேர்தலாக இருந்தாலும் சரி, மக்களவைத் தேர்தலாக இருந்தாலும் சரி, அ. தி. மு. க. தலைமையில்தான் கூட்டணி. அ. தி. மு. கதான் கூட்டணி கட்சிகளுக்கான இடங்களை ஒதுக்கும்", என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பேசினார்.

அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவிநீக்க வலியுறுத்தி நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் போராட்டம் நடந்தது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறிய நல்ல விசயங்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் பேசும்போது, தி. மு. க. ஊழல் கட்சி. அந்த ஊழல் கட்சி மீது மத்திய அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்று கூறியுள்ளார். அது ஒரு நல்ல விசயம். எனவே, சீக்கிரமாக அந்த நடவடிக்கையை எடுங்கள். எல்லோரையும் சிறையில் அடையுங்கள். அதைத்தான் இன்று தமிழகமே எதிர்பார்க்கிறது. .

ஆனால், அதேநேரத்தில் நீங்கள் ஒரு விசயத்தை தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரையில் அ. தி. மு. க. தலைமையில் தான் கூட்டணி. மீண்டும் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா ஆட்சி, பழனிசாமி தலைமையில் மலரும். இதுதான் நடக்கும்.

பா. ஜ. க. கட்சியை வளர்ப்பதற்காக அவர்கள் ஆயிரம் கருத்துகளை கூறுவார்கள். அதுகுறித்து நாம் கருத்து சொல்ல முடியாது. எங்களுடைய கருத்து என்பது தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலாக இருந்தாலும் சரி, மக்களவைத் தேர்தலாக இருந்தாலும் சரி, அதிமுக தலைமையில்தான் கூட்டணி. அ. தி. மு. கதான் கூட்டணிக் கட்சிகளுக்கான இடங்களை ஒதுக்கும். வேறு யாரும் எங்களுக்கு ஒதுக்க முடியாது. நாங்கள்தான் இடங்களை ஒதுக்கீடு செய்யும் அதிகாரத்தில் இருக்கிறோம்"- என்றார். (ஐ)

# கோயில்களில் வழிபாட்டில் சமத்துவத்தை உறுதி செய்க

## தமிழ்நாடு அரசிடம் திருமாவளவன் வலியுறுத்து

*சென்னை, ஜூன் 23*

கோயில்களில் வழிபாட்டில் சமத்துவத்தை உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக அரசாங்கத்துக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி கோரிக்கை வைத்துள்ளது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டம் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம், "தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் அனைத்துச் சமூகத்தினரும் சாதிய பாகுபாடின்றி வழிபாடு செய்வதற்கான உரிமையைத் தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். அதைத் தடுப்பவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்து சமய அறநிலையத் துறை சட்ட விதிகளின்படி தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழுள்ள 43 ஆயிரத்து 283 கோயில்கள் அனைத்திலும் அறங்காவலர் குழுக்கள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். தற்போது 780 கோயில்களில் மட்டும்தான் அறங்காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்து சமய அறநிலையத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பேடு தெரிவிக்கிறது.

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழுள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் அறங்காவலர் குழுக்களை அமைக்கும்போது சட்டப்படி ஆதி திராவிடர் ஒருவரும் பெண் ஒருவரும் அறங்காவலர்களாக நியமிக்கப்பட வேண்டும். அதைத் தமிழக அரசு உறுதி செய்யவேண்டும்.

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்கள் அனைத்திலும் வழிபாட்டில் சமத்துவம் கடைபிடிக்கப்படுகிறதா என்பதை இந்து சமய அறநிலையத்துறை ஆணையரிடம் முதல்வர் அறிக்கையை கேட்டுப்பெற வேண்டும். அந்த அறிக்கையைப் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடவேண்டும் - என்றும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# ஜனாதிபதி ரணிலுடன் தொடர்பிலுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களை அறிவேன்

## கூறுகின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 23

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பிலுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் நான் அறிவேன். எனினும் அது தொடர்பில் என்னால் கருத்துக்களை வெளியிட முடியாது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி அக்கட்சியைக் காட்டிக் கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. எல்லா பகுதிகளிலும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் பதிவாகிக்கொண்டிருக்கின்றன. புலிகளின் அனைத்து ஆயுதங்களும் எம்மால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. எனவே பாதாள உலகக் குழுவினல் புலிகளின் ஆயுதங்களை பயன்படுத்துவதாகக் கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது

ஆனால் பாதாள உலகக் குழுவினருக்கு இன்று ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வது கடினமான விடயமல்ல. நாட்டில் பல விடயங்கள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தினால் அதிகாரம் முறையாகப் பயன்படுத்தப்படாமையே இதற்



கான காரணமாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து யார் அரசாங்கத்துடன் இணைவார்கள் என என்னால் கூற முடியாது. எனினும் ஜனாதிபதியுடன் தொடர்பிலுள்ள சிலர் பற்றி நாம் அறிவோம். அது தொடர்பில் என்னால் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா எனக் கேட்டு என்னை அசௌகரியத்துக்கு உள்ளாக்கவேண்டாம். எனினும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகிச் சென்று அக்கட்சியை காட்டிக் கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை-என்றார். (அ)

# பாடசாலை மாணவருக்கு ஜப்பான் மொழிக் கற்கை

கொழும்பு, ஜூன் 23

எதிர்காலத்தில் தரம் 6 இல் இருந்து ஜப்பான் மொழிக் கற்கை ஆரம்பமாகவுள்ளது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போது அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டின் முன்னேற்றம் கருதி அமைச்சரவை அனுமதியுடன் கல்வி அமைச்சுடன் சேர்ந்து ஜப்பான் மொழியை கற்பிக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே இதற்கமைய தரம் 6 இல் இருந்து ஜப்பான் மொழி எதிர்வரும் காலங்களில் கற்பிக்கப்படவுள்ளது.

இதனூடாக எதிர்காலத்தில் மாணவர் கல்வியின் முன்னேற்றத்திற்காக வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய வழியை காட்டவே இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்கும்போது அரசாங்கம் அவர்களுக்கு 75 வீத புலமைப்பரிசிலை வழங்கும்-என்றார். (அ)

# டெங்கு அபாய வலயங்களாக 67 சுகாதார வைத்திய பிரிவுகள்

கொழும்பு, ஜூன் 23

67 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்தார்.

பத்தரமுல்லை, கொத்தட்டுவை, மஹரகம ஆகிய டெங்கு அபாயம் அதிகம் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளில் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் போது 7000 இற்கும் அதிகமான வீடுகளின் சுற்றுச்சூழலை பரிசோதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# மே மாத பணவீக்கம் 22.1 வீதமாக குறைவு

கொழும்பு, ஜூன் 23

தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டால் அளவிடப்படும் தேசிய பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 33.6 வீதத்திலிருந்து மே மாதத்தில் 22.1 சதவீதமாகக் குறைந்துள்ளது.

உணவுப் பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 27.1 வீதத்திலிருந்து மே மாதத்தில் 15.8 வீதமாகக் குறைந்துள்ளது, அதே நேரத்தில் உணவு அல்லாத பணவீக்கம் 39 வீதத்திலிருந்து 27.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இந்த வருட இறுதிக்குள் பணவீக்கம் ஒற்றை இலக்க மட்டத்திற்கு வரும் என மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. (அ)

# விபத்தில் ஆசிரியர் பலி! 7 வயது மாணவி காயம்!!

## ஆத்திரமடைந்த மக்கள் சாரதி மீது தாக்குதல்

கொழும்பு, ஜூன் 23

கொலன்னாவை ரஜமஹா விஹாரைக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஏழு வயதான பாடசாலை மாணவி படுகாயமடைந்து கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் தனது மகளை குப்பியாவத்தை பாடசாலைக்கு கொண்டு செல்வதற்காக மெகொட கொலன்னாவையிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்து அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது, கொலன்னாவை ரஜமஹா விஹாரைக்கு அருகில் அதே திசையில் பயணித்த பஸ் திடீரென இடப்புறம் திரும்பியதில் மோட்டார் சைக்கிளை சுமார் ஐம்பது மீற்றர் வரை இழுத்துச் சென்றது.

மெகொட கொலன்னாவை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்தையடுத்து, ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள், விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸை தாக்கி பலத்த சேதத்தை ஏற்படுத்தியதாகவும் பிரதேசவாசிகளால் தாக்கப்பட்ட பஸ் சாரதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்பு கருதி பஸ் முல்லேரியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# முட்டை, கோழி விலை 3 மாதங்களில் குறையும்

கொழும்பு, ஜூன் 23

முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையை குறைக்க இன்னும் மூன்று மாதங்கள் ஆகும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இலங்கைக்கு முட்டைகளை இறக்குமதி செய்வதல்ல, கால்நடை வளர்ப்புத் திட்டத்தை வெளிநாட்டுச் சந்தைக்கு வழங்கும் திட்டமாக மாற்றுவதே தமது நோக்கம் என விவசாய அமைச்சர் கூறினார்.

முட்டையின் விலை 50 ரூபா வைத் தாண்டியுள்ளதுடன், ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையும் 1,600 ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# 12 எம்.பிக்கள் சீனா பயணம்

கொழும்பு, ஜூன் 23

இலங்கை மற்றும் சீனா பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தைச் சேர்ந்த 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் சீனாவின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்க பதிவொன்றில் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளது.

சீனத் தரப்பின் அழைப்பின் பிரகாரம் இவர்கள் நாளை முதல் 30 ஆம் திகதி வரை பீஜிங், நிங்போ, ஷென்சென் மற்றும் குவாங்கூ ஆகிய இடங்களுக்கு பயணிக்கவுள்ளனர்.

இதன்போது சீன தேசிய மக்கள் காங்கிரஸ், வெளியுறவு அமைச்சகம், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச துறை மற்றும் நகரசபையின் உயர் அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளதாக சீன தூதரகம்



மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் ரயில்வே, துறைமுகங்கள், மின்சார வாகனங்கள், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் போன்றவற்றிலும் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று குறித்த பதிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# வன்முறைச் சம்பவங்களை தடுக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பொலிஸாருக்கு அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஜூன் 23

தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் நடைபெறும் வன்முறைக் குற்றங்களுக்கு எதிராக உடனடி மற்றும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

அதேபோல், அங்கீகரிக்கப்படாத அல்லது உரிமம் பெறாத துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை கையளிக்க ஜூலை 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தென் மற்றும் மேல் மாகாணங்களில் கொலை குற்றங்கள் அதிகரிப்பதற்கான காரணம் குறித்த மாகாணங்களில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் திறமையின்மை மற்றும் அலட்சியப் போக்கே காரணம் என பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தெரிவித்தார். (அ)

# நாணய நிதிய உரையாடல்களில் நாங்களும் பங்குபற்றவேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

**கொழும்பு, ஜுன் 23**

**சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களில் எதிர்க்கட்சிகளையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இலஞ்ச - ஊழல் சட்ட மூலத்தில் பெரும் குறை உள்ளது. அபகரிக்கப்பட்ட நாட்டின் சொத்துக்களை மீள பெற்றுக் கொள்ளும் விதிகள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த செயற்பாட்டை சரியான முறையில் முன்னெடுப்போம். ஐ.எம்.எப். உடனான அதிகாரிகள் மட்டக் கலந்துரையாடலில் எம்மை அரசாங்கம் இணைத்துக் கொள்ளவில்லை.

எம்மையும் சேர்த்துக் கொண்டால் நாமும் அரசாங்கத்துக்கு ஒரு பலமாக இருப்போம் அல்லவா? நான் ஒரு விடயத்தை இங்கே கூறுகிறேன். உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு செல்ல வேண்டாம் என எதிர்க்கட்சியினர் உள்ளிட்ட 225 பேரும் ஐ.எம்.எப்.ஐ வலியுறுத்துவோம்.

இதனை மேற்கொள்ள அரசாங்கத்திற்கு முதுகெலும்பு உள்ளதா? இதனை ஏன் கூற முடியாது. இதற்கு என்ன பதில்?

இதோ எமது தீர்வு. இப்போது என்ன கூறுகின்றீர்கள். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ஐ.எம்.எப். என்ன கூறுகிறது?

அதாவது, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை கவனமாக மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. நாணய நிதியத்துடன் மீள் பேச்சுவார்த்தைக்கு செல்ல வேண்டும். அரசாங்கம் இந்த சவாலை பொறுப்பேற்க வேண்டும்.

அரசாங்கம் இந்த சவாலை பொறுப்பேற்றால் எதிர்க்கட்சியாக நாமும் ஒத்துழைப்பு வழங்க தயாராகவே உள்ளோம்-என்றார்.

(அ)

# கடவுச்சீட்டுக்கு கைவிரல் அடையாளம் பெறும் செயன்முறை தென்மராட்சியில்



யாழ்ப்பாணம், ஜுன் 23

கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் நடைமுறை நேற்று புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த செயற்திட்டத்தை தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆரம்பித்து வைத்தார்.

ஒன்லைன் முறையில் விண்ணப்பித்து கடவுச்சீட்டுப் பெறுவதற்கான கைவிரல் அடையாளத்தை பதிவு செய்வதற்கு யாழ். மாவட்டத்தில் தென்மராட்சி மற்றும் பருத்தித்துறை ஆகிய இரண்டு பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# முன்னாள் சட்டமா அதிபர் கைது செய்யப்படமாட்டார்!

கொழும்பு, ஜுன் 23

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தமைக்காக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல லிவேராவை கைது செய்யப்போவதில்லை என சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றில் அறிவித்தார்.

முன்னாள் சட்டமா அதிபர் தப்புல லிவேராவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு சோபித ராஜகருணா மற்றும் ஏ.எல்.எம். மரிக்கார் ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் இந்த வாக்குறுதியை அளித்துள்ளார்.

(அ)

# பிரபல பாதணி நிறுவனத்தின் பணிப்பாளரின் வீடு மீது சூடு!

கொழும்பு, ஜுன் 23

பொரளை குறுக்கு வீதியில் அமைந்துள்ள நாட்டின் முன்னணி பாதணி நிறுவனம் ஒன்றின் நிறைவேற்றுப் பணிப்பாளரின் வீட்டின் மீது ரி- 56 ரக துப்பாக்கியால் துப்பாக்கிப் பிரயோகம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 5. 30 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு இடம்பெறும் போது, குறித்த நபர் வீட்டிலேயே இருந்துள்ளதுடன், துப்பாக்கிப் பிரயோகத்தால் அவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிச் சூட்டினால், வீட்டின் பிரதான நுழைவாயில் கதவுக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கான காரணம் இதுவரை வெளிப்படுத்தப்படாத நிலையில், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரும், பொரளை பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(அ)

# பொலிஸ் சார்ஜன்டை தாக்கிய மூவர் கைது

கொழும்பு, ஜுன் 23

எல்பிட்டிய, நாவாந்தகல கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை தடியால் தலையில் தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுக்கு வந்த இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை தடுக்கச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த சார்ஜன்ட் எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவரை அங்கிருந்த ஏனைய பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)

# வீசா காலத்தை மீறுவோருக்கான அபராதத் தொகையில் திருத்தம்

கொழும்பு, ஜுன் 23

வீசா காலத்தை மீறி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களின் அபராதத் தொகையை திருத்தியமைத்து புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி பொது பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

14 நாட்கள் வரை தங்கியதற்கான அபராதம் 250 டொலர்களாகவும், 14 நாட்களுக்கு மேல் அபராதம் 500 டொலர்களாகவும் திருத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அசல் விசாவின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் இலங்கையை விட்டு வெளியேறுபவர்கள், புதிய வர்த்தமானியின்படி, எந்தவொரு அபராதமும் செலுத்தாமல், பொருந்தக்கூடிய விசா கட்டணத்தை செலுத்தி நாட்டை விட்டு வெளியேறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கட்டுப்பாட்டு விலையைவிட குறைந்த விலையில் அரிசி!

கொழும்பு, ஜுன் 23

சந்தையில் நிலவும் கட்டுப்பாட்டு விலையை விட குறைந்த விலையில், அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.



தற்போது சந்தையில், ஒரு கிலோகிராம் வெள்ளை அரிசி 125 முதல் 130 ரூபாவரையில் விற்பனை செய்யப்படுவதாக ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் குறிப்பிட்டார்.

220 ரூபாவுக்கு கட்டுப்பாடு விலை அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கும் குறைந்த விலையிலேயே அரிசி விற்பனை செய்யப்படுகின்றது. இதனை உரிய வகையில் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார். (அ)

# வடக்கின் 5 மாவட்டங்களின் அபிவிருத்திக் குழு இணைத் தலைவராக ஆளுநர் சார்ள்ஸ் நியமனம்

கொழும்பு, ஜுன் 23

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி செயலகம், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களின் அபிவிருத்தி குழுக்களின் இணை தலைவராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சார்ள்ஸை நியமித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களாக அந்த மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடமையாற்றுகின்றனர்.

எனினும் சில மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் ஆளுநர் கலந்துக் கொள்ளாத காரணத்தினால், ஜனாதிபதி செயலகம், ஆளுநரை, இணைத் தலைவர் பதவிக்கு நியமித்துள்ளது.

(அ)

# மிக உருக்குலைந்த நிலையில் தொண்டைமானாற்றில் சடலம்

யாழ்ப்பாணம், ஜுன் 23

வடமராட்சிப் பகுதியில் அடையாளம் தெரியாத நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு பகுதியிலேயே இந்த சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

30 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே இவ்வாறு கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ-02)

# இலங்கை மக்களின் ஆயுட்காலம் குறைவு

## பொருளாதார நிபுணர்களின் ஆய்வில் தகவல்

கொழும்பு, ஜூன் 23

**இலங்கையில் சிசு மரண வீதம் அதிகரித்துள்ளதாகவும், மக்களின் ஆயுட்காலம் குறைந்துள்ளதாகவும் வெளிநாட்டு பொருளாதார நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.**

இந்த கணக்கெடுப்பின்படி, சிசு இறப்பு விகிதம் அதிகமாக உள்ள நாடுகளில் இலங்கைக்கு அடுத்தபடியான சாம்பியா மற்றும் கானா ஆகிய நாடுகள் உள்ளன.

இப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட நாடுகள் பெரும் சிக்கலுக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமைக்கு அந்த நாடுகளின் அதிக கடன் சுமையே பிரதான காரணம் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், இலங்கை, சாம்பியா, கானா ஆகிய நாடுகள் சீனாவிடம் கடன் பெற்றுள்ள நிலையில், இந்தப் பிரச்னைகளில் சீனா உரிய முறையில் தலையிடவில்லை என பெரும்பாலான மேற்குலக நாடுகள் குற்றம் சுமத்துவதாகவும் வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எதிர்க்கட்சி தலைவர் தொலைக்காட்சியில் பத்திரிகை வாசிப்பவர்களைப் போன்றவர்!

## சபையில் கூறினார் அமைச்சர் காஞ்சன

கொழும்பு, ஜூன் 23

தொலைக்காட்சியில் காலையில் பத்திரிகைகளை வாசிக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இப்படி நடந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என பத்திரிகையை வாசிக்கும் ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர். எனினும் பொறுப்பை வழங்கினால், முடியாது. எதிர்க்கட்சித் தலைவரும் அப்படியே.

பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவாவே எதிர்க்கட்சிக்கு ஆலோசனைகளை வழங்குகிறார். அவரிடம் ஆலோசனைகளை பெற்றால், கோட்டாபயவுக்கு நடந்ததே, எதிர்க்கட்சித் தலைவருக்கும் நடக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாசவுக்கு பொறுப்பை வழங்காது ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கியதால், நாடு ஒரு ஸ்திரத்தன்மைக்கு வந்துள்ளது-என்றார்.

# சிறுவர்களிடையே பரவும் காசநோய்!

கொழும்பு, ஜூன் 23

நாட்டில் சிறுவர் காசநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் சுவாச நோய் நிபுணர் வைத்தியர் சன்ன டி சில்வா தெரிவித்தார்.

அதன்படி, இந்த வருடத்தின் முதல் காலாண்டில் குறித்த நோயினால் பாதிக்கப்பட்ட 59 சிறுவர்களும், கடந்த 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 49 சிறுவர்களும் பதிவாகியுள்ளனர்.

கடந்த 2022 மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 187 ஆகும்.

குழந்தை ஒன்றுக்கு தாயின் வயிற்றில் இருக்கும் பொழுதே காசநோய் பக்டீரியாக்களால் பாதிக்கப்படலாம் என்றும், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உயிருக்கு இந்த நோயினால் ஆபத்து உள்ளதாகவும் நிபுணர் வைத்தியர் சன்ன டி சில்வா சுட்டிக்காட்டினார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் மதிப்பீடுகளின்படி, இலங்கையில் காசநோயாளிகளின் மொத்த சதவீதத்தில் 08 வீதமானவர்கள் குழந்தைகள் ஆவர். எனினும் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள குழந்தை காசநோயாளர்கள் 03 வீதத்துக்கும் குறைவாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காசநோயாளிகளைக் கண்டறிய முடியாத நிலை காணப்படுவதால் சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

உடல் எடையை சரியாக அதிகரிக்காமல் இருப்பது, இயல்பை விட உடல் எடையை குறைப்பது, அடிக்கடி இருமல் மற்றும் 02-03 வாரங்களுக்கு மேல் கழுத்து வீக்கம் போன்றவற்றை இந்த நோயின் அறிகுறிகளாக சுட்டிக்காட்டலாம் என அவர் கூறினார்.

இதேவேளை, வீட்டில் உள்ள காசநோயாளி ஒருவரிடமிருந்தோ அல்லது காசநோய் என அடையாளம் காணப்படாத ஒருவரிடமிருந்தோ வீட்டில் உள்ளவர்களிடமிருந்தோ குழந்தைகளுக்கு இந்நோய் பரவுவதாகவும் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளில் இருந்து பரவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நோய் அறிகுறிகளின்றி குழந்தையின் உடலில் பரவக்கூடியது எனவும், எதிர்காலத்தில் இந்நோய் வராமல் தடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை வழங்குவது மிகவும் அவசியம் எனவும் வைத்தியர் வலியுறுத்தினார்.

தற்போது, இலங்கையில் காசநோய் பரிசோதனைக்கு தேவையான இலவச வசதிகள் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்காக குழந்தை வைத்தியசாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் புதன்கிழமைகளில் காசநோய்க்கும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு வைத்தியர் ஒருவரின் பரிந்துரையின் பேரில் அதில் கலந்துகொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்தார்.

வருடாந்தம் காசநோயினால் அதிகளவான இலங்கையர்கள் உயிரிழப்பதாகவும், அந்த எண்ணிக்கை 600 எனவும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் காசநோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

மேலும், இரண்டு வாரங்களுக்கு இருமல், சுவாசிப்பதில் சிரமம், இரத்தம் வெளியேறுதல் போன்ற அறிகுறிகள் இருந்தால், உடனடியாக சிகிச்சை பெற வேண்டும் எனவும் சிகிச்சையை தாமதப்படுத்தினால் மரணம் நேரிடும் எனவும் வைத்தியர்கள் வலியுறுத்துகின்றனர்.

(அ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் சிலர் ரணிலுடன் நெருங்கிய தொடர்பு

## ஹிருணிகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 23

ஐக்கிய மக்கள் சக்தியின் சிலரது செயற்பாடுகள் காரணமாக வெறுப்படைந்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கடுவலையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த சிலர் காலையில் முதல் மதியம் வரை கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இருந்துவிட்டு பேசப்பட்ட விடயங்கள் அனைத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிக்கையாக வழங்குகின்றனர்.

மேலும் சிலர் இரவு நேரங்களில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுடன் களியாட்ட நிலையங்களில் மது அருந்துகின்றனர்.

இப்படியான இரண்டு பக்கமும் கால்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் கட்சியில் இருக்கும் போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றமுடியுமா?.

இவர்களை பற்றி நாங்கள் கட்சியின் தலைவரிடம் கூறியுள்ளேன். சில மாதங்களுக்கு முன்னர் வரிசைகளில் சிலர் இறந்து



போனதை மக்கள் மறந்துவிட்டனர். சிங்கள மக்களுக்கு இரண்டு வாரங்களுக்கே எதுவும் நினைவில் இருக்கும் என பிரபாகரன் கூறியுள்ளார்.

சில ஊடகங்கள் மக்கள் போராட்டங்களை வெறுக்கும்படியான செய்திகளை வெளியிடுகின்றன. வறுமை காரணமாக மக்கள் வீதியில் இறங்கினர்.

போதைப்பொருள் பாவனையாளர்களே போராட்டத்தை நடத்தியதாக பிரசன்ன ரணதுங்க கூறுகிறார். போராட்டக்காரர்கள் சீர்குலைப்பில் ஈடுபட்டவர்கள் என சில ஊடகங்கள் மறைமுகமாகக் கூறுகின்றன.

உலகில் முதல் முறையாக ஆட்சியாளரை விரட்டி எமது முதுகெலும்பை காட்டினோம். போராட்டம் காரணமாக பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷவினரை பாதுகாத்து வருகிறார்.

என்னை ரணில் விக்கிரமசிங்க தொடர்பு கொள்வதில்லை. அவரது வீட்டுக்கு எதிரில் நான் போராட்டம் நடத்தியதன் காரணமாகவே வீடு தீயிடப்பட்டதாக அவர் நினைக்கின்றார்.

அதேபோல் ரணில் விக்கிரமசிங்கவிடம் வகுப்பு பேதம் இருக்கின்றது. அதனை பார்த்தே தற்போதும் பதவிகளை வழங்குகிறார்.

எமது கட்சியில் இரட்டை நாக்கு உள்ளவர்கள் இருக்கின்றனர். பகலில் கட்சியின் தலைவருடன் இருந்து இரவு சென்று சகலவற்றையும் ரணிலிடம் கூறுகின்றனர்.

ஹரின் பெர்னாண்டோ போன்றவர்கள் வெளியேறிய போது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருந்தால், இவர்கள் இப்படி நடந்துக்கொள்ளமாட்டார்கள்.

நான் வெறுப்படைந்துள்ளேன். எங்களை பொருட்படுத்துவதில்லை. இரட்டை நாக்கு கொண்டவர்களை மாத்திரமே அருகில் இணைத்துக்கொள்கின்றனர்.

சஜித் என்ற ஏணியில் ஏறி பாராளுமன்றத்திற்கு சென்றவர்கள், கட்சியை விட்டு செல்லப் போகின்றனர் என்றால், தற்போதே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எமது தலைவர் மாறவேண்டும். நெஞ்சை நிமிர்த்தி வேலை செய்யவேண்டும்-என்றார்.

(அ)

# கராப்பிட்டிய வைத்தியசாலையில் 100 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, ஜூன் 23

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சுமார் 100 வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும், இந்த நிலை காரணமாக நோயாளர் பராமரிப்பு சேவைகளை பேணுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியர்கள் பற்றாக்குறையால், வைத்தியசாலைகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள அறுவை சிகிச்சை பிரிவு மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு 556 வைத்தியர்கள் தேவைப்படுகின்ற போதிலும் தற்போது 460 வைத்தியர்கள் மட்டுமே இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியர்கள் பற்றாக்குறையினால் குறிப்பிட்ட வைத்திய பிரிவுகளை நடத்துவதில் சிக்கல்கள் ஏற்படுவதுடன், இந்நிலைமையால் நோயாளர்களும் கடும் சிரமங்களையும், அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.பி.யூ.எம். ரங்க, சுகாதார அமைச்சு போதிய வைத்தியர்களை வழங்காத காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சில வைத்தியர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்று வெளிநாடு செல்வதும் இதற்கு மற்றொரு காரணம் என தெரிவித்த அவர், சில துறைகளில் சிறப்பு வைத்தியர் பற்றாக்குறை உள்ளதாகவும் கூறினார்.

(அ)

யூசப் எல்டின்

# பலஸ்தீனம்:

## அரசு, அரசியல் மீது நம்பிக்கை இழந்து இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் தூக்குவது ஏன்?



ஒரு பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் வாய்ப்பு கூட இதுநாள்வரை தங்களுக்கு கிடைக்கவில்லை என்று வருத்தம் தெரிவிக்கின்றனர் 30 வயதுக்குட்பட்ட பாலஸ்தீன இளைஞர்கள். பாலஸ்தீன தலைமை மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர்களில் பலர் கூறுகின்றனர். இஸ்ரேல் -பாலஸ்தீனம் இடையேயான பிரச்னைக்கு ‘இரண்டு நாடுகளின் தீர்வு’ எனும் யோசனையை அவர்களில் பெரும்பாலானோர் நிராகரிப்பதும், இதுதொடர்பாக பகிரப்பட்ட பிரத்யேக தரவுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

“பாலஸ்தீனத்தில் நிலவும் உண்மையான சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளாமல், இஸ்ரேல் - பாலஸ்தீன பிரச்னைக்கு ‘இரு தனி நாடுகள்’ எனும் கவர்ச்சிகரமான தீர்வை மேலை நாடுகள் வலியுறுத்தி வருகின்றன” என்கிறார் 17 வயதான பாலஸ்தீன இளம்பெண்ணான ஜன்னா தமிமி.

“இரு தனி நாடுகள் தான் தீர்வு என்றால் அவற்றுக்கான எல்லைகள் எங்கே?” என்றும் அவர் கேள்வி எழுப்புகிறார்.

உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட இளம் பத்திரிகையாளர்களில் தானும் ஒருவர் எனக் கூறும் ஜன்னா, ஏழு வயதில் தனது தாயிடம் இருந்து செல்போனை வாங்கி, அதில் மேற்கு கரை பகுதியில் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனது சொந்த ஊரான நபி சலாவில் நடைபெறும் போராட்டங்களை படம்பிடித்து வருவதாக கூறுகிறார்.

“இரவு, பகல் என்று பாராமல் இஸ்ரேலிய படைகள் இங்கு நடத்திவரும் தொடர் தாக்குதல்கள் குறித்து நான் பதிவு செய்து வருகிறேன். அந்த தாக்குதல் தொடர்பான காட்சிகள் அனைத்தையும் படம் பிடிக்க முடியவில்லை என்றாலும், என்னால் முடிந்தவரை அவற்றை படம்பிடிக்க முயல்கிறேன். ஆனால் எப்போதும் ஏதேனும் தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டுதான் உள்ளன” என்கிறார் ஜன்னா.

### சீர்குலைந்த நம்பிக்கை

கடந்த இரண்டு தசாப்தங்களைச் சேர்ந்த பாலஸ்தீன மக்களுக்கு, அதாவது 18 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு, பாலஸ்தீன அரசியல் தலைமை மீதான நம்பிக்கை குலைந்துள்ளது என்பது பாலஸ்தீன கொள்கை மற்றும் ஆராய்ச்சி மையத்தால் பிரத்யேகமாக பகிரப்பட்டுள்ள தரவுகளின் மூலம் தெரிய வந்துள்ளது. இஸ்ரேல் உடனான பாலஸ்தீன பிரச்னைக்கு ‘இரு தனி நாடுகள்’ எனும் சர்வதேச நாடுகளின் பாஷையில் சொல்லப்படும் அமைதி தீர்வுக்கு பாலஸ்தீனர்கள் மத்தியில் ஆதரவு குறைந்து வருவதையும் மேற்கு கரையை மையமாகக் கொண்டு செயல்படும் இந்த மையத்தின் தரவுகள் எடுத்துரைக்கின்றன.

“கடந்த 14 ஆண்டுகளாக இங்கு ஒரு அதிபர் இருக்கிறார். தேர்தல் நடத்தப்படாமலேயே தொடர்ந்து அவர் இந்த பதவியில் நீடிக்கிறார். இதுபோன்ற சட்டபூர்வமற்ற நடைமுறைகளால் ஆட்சியாளர்கள் மீது இன்றைய இளம் தலைமுறையினர் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்” என்கிறார் பாலஸ்தீன கொள்கை மற்றும் ஆய்வு மையத்தின் இயக்குநரான டாக்டர் கலீல் ஷிகாகி.

“பாலஸ்தீனத்திற்கும் அரசியலமைப்புச் சட்டம் உள்ளது. ஆனால் அது வெறும் ஏட்டளவில் இருப்பதாகவே தெரிகிறது. நடைமுறையில் பாலஸ்தீன அரசியல் சர்வாதிகாரத்துடன், பெரும்பாலும் தனி நபர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு தான் உள்ளது” என்கிறார் அவர்.

### ஆயுத போராட்டத்திற்கு ஆதரவு

அதேநேரம், 30 வயதிற்குட்பட்ட பாலஸ்தீன இளைஞர்களில் பெரும்பாலோர், இஸ்ரேலுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இதுதொடர்பாக கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 56 வீதத்திற்கும் மேலான இளைஞர்கள், இஸ்ரேலுக்கு எதிரான பாலஸ்தீன எழுச்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் வடமேற்கு கரை பகுதியில் அமைந்துள்ள நப்லஸ் மற்றும் ஜெனின் நகரங்களில் உருவாகி உள்ள புதிய போராட்டக் குழுக்கள், பாலஸ்தீன அரசு படைகளுக்கு சவால் விடுபவையாக அமைந்துள்ளன.

இந்த போராட்ட குழுக்களில் லையன்ஸ் டென் மற்றும் ஜெனின் பிரிகேடிஸ் ஆகியவை மிகவும் பிரபலமானவை. மேற்கு கரை பகுதிகளில் குடியேறியவர்கள் மற்றும் இஸ்ரேல் படையினருக்கு எதிராக இந்த போராட்ட குழுக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்தப் போராட்ட குழுவின் முகாம் அமைந்துள்ள தெருக்களில் ஜெனின் பிரிகேடிஸ் குழு ஒரு நாள் நள்ளிரவு 2 மணிக்கு தாக்குதல் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தது.

பயிற்சி மேற்கொண்டிருந்தவர்களில் பெரும்பாலோர் 20 வயதுடைய இளைஞர்களாகவே இருந்தனர். உச்சி முதல் உள்ளங்கால் வரை கருப்பு ஆடையால் தங்கள் உடலை முடியிருந்த அவர்களின் அனைவரது கைகளிலும் ‘எம். 16’ ரக துப்பாக்கிகள் இருந்தன.

### வன்முறைக்கு ஆதரவா?

தற்போதுள்ள அரசியல் தலைமை, எங்கள் தலைமுறையை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று வருத்தத்துடன் கூறுகிறார் 28 வயது போராளியான முஜாஹத்.

கடந்த 30 ஆண்டுகளாக இங்குள்ள அரசியல் வழிமுறைகள் மீது பாலஸ்தீன இளைஞர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்கிறார் அவர்.







அப்படியானால் இஸ்ரேல் -பாலஸ்தீன பிரச்னையில் வன்முறை தீர்வை அவர் ஆதரிக்கிறாரா? என்ற கேள்வி எழுகிறது.

இஸ்ரேல் படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை இதற்கு பதிலாக குறிப்பிடும் முஜாஹத், இஸ்ரேலின் இந்த அராஜக போக்கிற்கு வன்முறையால் தான் பதிலடி தர முடியும் என்கிறார் அவர்.

### மக்களின் மனநிலையை பிரதிபலிக்கும் மாணவர் தேர்தல்

பல ஆண்டுகளாக, பாலஸ்தீனத்தில் பொதுத் தேர்தல் அல்லது அதிபர் தேர்தல் நடத்தப்படாதது குறித்த அந்நாட்டு இளைஞர்களுக்கு இருந்து வரும் வருத்தம் பல்கலைக்கழகங்களின் மாணவர் தேர்தல்களில் பிரதிபலித்து வருகிறது. மேற்கு கரையில் அமைந்துள்ள பிர்சைட் பல்கலைக்கழகம் மற்றும் அங்கு நடத்தப்பட்டுள்ள மாணவர் தேர்தல்கள் அந்தப் பகுதி மக்கள் மத்தியில் நிலவும் அரசியல் மனநிலையை பிரதிபலிப்பதாக பரவலாக கருதப்படுகிறது.

பாலஸ்தீனத்தில் ஆட்சி, அதிகாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஓர் கட்சியின் இளைஞர் பிரிவான மாணவர் பதாக் கட்சி தான், பல்கலைக்கழக மாணவர் தேர்தலில் எப்போதும் ஆதிக்கம் செலுத்தும். இக்கட்சி தமது முக்கிய எதிர்ப்பாளர்களான ஹமாஸ் அமைப்பு உள்ளிட்டவற்றை இந்தத் தேர்தலில் தோற்கடிப்பது தான் வழக்கம். ஆனால் இந்த நடைமுறை கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தலைகீழாக மாறியது என்கிறார் பாலஸ்தீன விடுதலைக்கான ஜனநாயக முன்னணியின் மாணவர் பிரதிநிதியான முஸ்தபா.

2022இல் நடைபெற்ற பல்கலைக்கழக மாணவர் தேர்தலில் தங்களின் கட்சியும் போட்டியிட்டதாக கூறும் முஸ்தபா, அந்த தேர்தல் முடிவுகள் அதிர்ச்சி அளிப்பவயாக இருந்தன என்கிறார்.

“மாணவர் தேர்தலில், பதாக் மற்றும் ஹமாஸ் உள்ளிட்ட அமைப்புகளுக்கு இடையேயான வெற்றி வித்தியாசம் மிகவும் குறைவாக இருப்பது தான் வழக்கம். ஆனால் கடந்த ஆண்டு தேர்தலில் ஹமாஸ் கட்சியின் வெற்றி வித்தியாசம் அதிகமாக (10 இடங்கள்) இருந்தது” என்கிறார் மாணவர் முஸ்தபா.

ஆட்சியாளர்களுக்கு எதிரான பாலஸ்தீன இளைஞர்களின் மனநிலையை இந்த தேர்தல் முடிவுகள் உணர்த்துவதாக பார்க்கப்படுகிறது.

### பொதுத் தேர்தல் முடிவும் இப்படிதான் இருக்குமாம்!

பல்கலைக்கழக மாணவர் தேர்தலில் ஹமாஸ் அமைப்பின் அமோக வெற்றி, பாலஸ்தீன அதிகார வர்க்கத்தின் மீதான எதிர்ப்பாகவே பார்க்கப்படுகிறது.

“பாலஸ்தீனத்தில் இனி எப்போது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதன் முடிவுகள், கடந்த ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழக மாணவர் தேர்தலில் வெளியான முடிவுகளை போலவே அமையும்” என்கிறார் முஸ்தபா.

அரசியல் கைதுகள் போன்ற முக்கியமான விவகாரங்களை பாலஸ்தீன அரசு கையாளும் விதம் மற்றும் பொது மக்கள் மீது விதிக்கப்படும் வரிகள், கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதல் போன்ற நடவடிக்கைகளால் பாலஸ்தீன மக்கள், ஆட்சியாளர்கள் மீது கடும் கோபத்தில் உள்ளனர் என்கிறார் அவர்.

### முந்தைய தலைமுறையினரின் எண்ணம் என்ன?

இஸ்ரேல் -பாலஸ்தீன மோதலில், பாலஸ்தீனத்தை சேர்ந்த இளம் தலைமுறையினரின் நிலைப்பாடு இவ்வாறு இருக்க, இந்த விவகாரத்தில் முந்தைய தலைமுறையினரின் எண்ணம், அவர்களின் அடையாளம் என்ன என்பது தொடர்பான கேள்விகளும் எழுந்துள்ளன.

கலை மற்றும் கல்வி தொடர்பான பணிகளை மேற்கொண்டு வரும் குவாட்டன் பவுண்டேஷன் எனும் தன்னார்வ அமைப்பில் பணியாற்றி வருபவர் மஜித் நஸ்ரல்லா.

மேற்கு கரை பகுதியில் அமைந்துள்ள ரமல்லா நகரில் இவர் வசித்து வந்தாலும், வடக்கு இஸ்ரேலிய பகுதியில் அமைந்துள்ள ஒரு நகரில் தான் இவர் பிறந்தார்.

இஸ்ரேலின் மொத்த மக்கள் தொகையில் 20 சதவீதம் பேர் அரேபிய குடிமக்களாக உள்ளனர். தமது தலைமுறையைச் சேர்ந்த பெரும்பாலோரை போலவே மஜித் நஸ்ரல்லாஹ் தம்மை 1948 இல் இருந்து அடையாளம் காண விரும்புகிறார். 1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பின் அந்த நிலத்தில் தங்கியிருந்த பாலஸ்தீனர்களின் தலைமுறை ஒன்று உள்ளது. இந்த தலைமுறையை சேர்ந்த மஜித் நஸ்ரல்லாஹ், பாலஸ்தீன சமூகத்தில் இருந்து தன்னைத் தானே விலக்கி கொள்கிறார்.

“மேற்கு கரை பகுதியில் பாலஸ்தீன அமைப்பின் ஒரு அங்கமாக நான் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, பாலஸ்தீனத்தில் நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்க முடியாது என கருதுகிறேன். இன்னும் சொல்லப்போனால், இஸ்ரேல் சட்டப்படி நான் ரமல்லாவில் வசிக்க கூடாது” என்று கூறுகிறார் மஜ்த் நஸ்ரல்லாஹ்.

பாதுகாப்பு காரணங்களுக்காக தங்களின் குடிமக்கள் மேற்கு கரையில் உள்ள பாலஸ்தீன பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்வதற்கு இஸ்ரேல் சட்டப்படி தடை விதித்துள்ளது.

### மோசமான திட்டம்

இஸ்ரேல் -பாலஸ்தீன மோதலுக்கு “இரு நாடுகளின் தீர்வு” என்பது உண்மையில் ஒரு மோசமான அரசியல் திட்டம் எனக் கூறும் மஜித், பாலஸ்தீன மக்கள் மீதான தொடர் ஒடுக்குமுறையை மறைக்கும் நோக்கில் இந்த திட்டம் பயன்படுத்தப்படுகிறது என்கிறார். இந்த தீர்வில் முன்மொழியப்படும் இரு நாடுகளின் எல்லைகளை குறிக்கும் வரைபடத்தை ஓர் ஐந்து வயது குழந்தையிடம் காண்பித்தாலே, இத்திட்டம் செயல்படுத்த இயலாதது என்று கூறி விடும் என்கிறார் மஜ்த்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன பகுதிகளை உள்ளடக்கிய ‘ஒரு ஜனநாயக நாடு’ உருவாக வேண்டும் என்பதை வலியுறுத்தி நீண்ட காலமாக தாங்கள் குரல் கொடுத்து வந்துள்ளோம் என்கிறார் மஜ்த். ஆனால் இந்த விவகாரத்தில் பாலஸ்தீன அரசு நிர்வாகத்தின் அணுகுமுறை குறித்த தங்களது அதிருப்தியை பலமுறை வெளிப்படுத்தி இருக்கிறோம். ஆனால் எங்களின் குரல்கள் நசுக்கப்பட்டன. எங்களது தலைமுறையை சேர்ந்தவர்களின் குரலை மட்டுமல்ல, ஒட்டுமொத்த பாலஸ்தீனத்தினர்களின் குரலையும் பாலஸ்தீன அரசு கருத்தில் கொள்ளவில்லை என்கிறார் மஜ்த் மிகுந்த வருத்தத்துடன்.

1948இல் ஒரு நாடு இரண்டு பிரதேசங்களாக பிரிக்கப்பட்டது. அதில் இஸ்ரேல், பிரிக்கப்பட்ட நாள் முதலே தனி நாடாக அங்கீகரிக்கப்பட்டது. மற்றொரு பிரதேசமான பாலஸ்தீனம் இன்று வரை தனி நாடு என்கிற அங்கீகாரத்திற்காக போராடி வருகிறது.

‘இரு நாடுகளின் தீர்வு’ என்பது வெவ்வேறு சமூகங்கள் மற்றும் மொழிகளைக் கொண்ட இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய இரு நாட்டு மக்களுக்கு இரண்டு தனித்தனி பிரதேசங்களை வழங்குவது பற்றி பேசுகிறது.

# ஏன் 13ஆவது திருத்தச்சட்டத்தை கெட்டியாக பற்றிக்கொள்ள வேண்டும்?





யதீந்திரா

13வது திருத்தச்சட்டமானது, இந்தியாவின் நேரடியான தலையீட்டின் விளைவு. இதன் காரணமாகவே இன்றும் இந்தியா அது தொடர்பில் பேசிவருகின்றது. தமிழ் அரசியல் சூழலை பொறுத்தவரையில், இது தொடர்பில் பலவாறான குழப்பங்கள் உண்டு. 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசுகின்றவர்களை பின்வரும் மூன்று பிரிவுகளாக நோக்கலாம். ஒரு பிரிவினர், 13வது திருத்தச்சட்டத்தின் போதைமை தொடர்பில் பேசுகின்றனர். இன்னொரு பிரிவினர் 13வது திருத்தச் சட்டமென்பது, இந்தியாவின் தேவைக்காக பேசப்படுவதாக கற்பனை செய்கின்றனர். இன்னொரு பிரிவினரோ, 13வது திருத்தச்சட்டத்தை ஒரு தீண்டத்தகாத விடயமாக பார்க்கின்றனர். 13வது திருத்தச்சட்டத்தை சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று வாதிடும் ஒரு தரப்பினருமுண்டு. அவர்கள் மிகவும் சிறுபான்மையினர். தமிழரசு கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகள் பலர் மதில் மேல் பூனையாக இருக்கின்றனர்.

முதலாவது இந்தியா தொடர்பில் பார்ப்போம். இந்தியா 13வது திருத்தச்சட்டத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதாக பேசுவோர் உண்டு. குறிப்பாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, இவ்வாறானதொரு பிரச்சாரத்தை முன்னெடுத்துவருகின்றது. இது அடிபபடையிலேயே தவறானது. அரசியல் தொடர்பில் போதிய புரிதலின்மையின் விளைவு. இந்தியாவிடம் தமிழ் கட்சிகள் உதவி கோருகின்ற காரணத்தினாலேயே, இந்தியா இந்த விடயம் தொடர்பில் பேசுகின்றது. இதனை தாண்டிச் செல்லும் வல்லமை தமிழர்களிடம் இருந்தால், அதன் பின்னர் இந்தியாவிற்கு அவசியமில்லை. 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் உதட்டளவில் பேசிவிட்டே, இந்தியா அமைதியாக இருக்க முடியும்.

ஏனெனில் கடந்த 35 வருடங்களாக 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாமலாக்குவதற்கு கொழும்பின் ஆட்சியாளர்கள் முயற்சிக்கவில்லை. சீன சார்பான மகிந்த ராஜபச்சவின் ஆட்சிக்காலத்தில், கொள்கையளவில் சீனாவிற்கு ஆதரவான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) ஊடாகவே, வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 13வது திருத்தச்சட்டம் பெரியளவில் பலவீனப்படுத்தப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். முதலாவது நகர்வு, பிரேமதாச காலத்தில் இடம்பெற்றது. மேற்படி இரண்டு சந்தர்பங்களையும் நோக்கினால் ஒரு விடயத்தை காணலாம். அதாவது, 13வது திருத்தச்சட்டம் பலவீனப்படுத்தப்பட்ட முதலாவது நகர்வு, விடுதலைப் புலிகள் - பிரேமதாச உடன்பாட்டின் கீழ் இடம்பெற்றது. ஏனெனில் எதிரிக்கு எதிரி நண்பண் என்பது போல், இந்தியாவிற்கு எதிரான இரண்டு தரப்புக்களும் ஒன்றிணைந்து, இந்தியாவை வெளியேற்றுவதில் வெற்றிபெற்றன. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பரம எதிரியான பிரேமதாச, இந்த சந்தர்ப்பத்தை கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டு, 13வது திருத்தச்சட்டத்தை பலவீனப்படுத்தினார்.

இதன் பின்னர், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் சாத்தியப்பட்ட வடக்கு கிழக்கு இணைப்பை, நிரந்தரமாக பிரிக்கும் நோக்குடன், 2006இல், இந்திய எதிர்ப்பு ஜே.வி.பி வழக்கொன்றை தாக்கல் செய்து, அதனை சாத்தியப்படுத்தியது. 1990களுக்கு பின்னரான சூழலில், இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாக தலையீடு செய்யவில்லை. இந்தக் காலத்தில், வடக்கு கிழக்கு இணைப்பை இல்லாமலாக்குவற்கான முயற்சிகளை சிங்கள ஆட்சியாளர்கள் செய்திருக்கலாம். ஆனால் அதற்கு எவருமே முயற்சிக்கவில்லை. இந்திய எதிர்ப்பு சக்திகள் தங்களை பலமாக ஒன்றிணைத்திருந்த சூழலிலேயே, 13வது திருத்தச்சட்டம் பாரதூரமாக பலவீனப்படுத்தப்பட்டிருப்பதை இப்போது ஒரு தெளிவாக புரிந்து கொள்ள முடியும். 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் முன்னோக்கி பயணிக்க முடியுமானால், அது, தமிழ் மக்களுக்கு மட்டுமே நன்மையானது. இந்தியாவிற்கு அல்ல. ஏனெனில் இந்தியா இப்போதிருப்பது போன்றே, உதட்டளவில் பேசிக்கொண்டிருக்க முடியும். ஏனெனில் 13வது திருத்தச்சட்டத்தை இலங்கை முழுமையாக இல்லாமலாக்க முயற்சிக்கப் போவதில்லை. ஆனால் தமிழர்கள், 13வது திருத்தச்சட்டம் வேண்டாமென்று வாதிடுகின்ற போது, கொழும்பு 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க முடியும்.



இரண்டாவது 13வது திருத்தச்சட்டம் போதாது - அதனை ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாதென்று வாதிடும் தரப்பினர் பற்றியது. 13வது திருத்தச்சட்டத்தில் சில குறைபாடுகள் உண்டு என்பது தொடர்பில் முரண்பாடுகள் இல்லை. அந்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதும் முக்கியமானது. ஆனால் இங்கு பிரச்சினை அதனை எவ்வாறு முன்னெடுப்பது என்பதாகும். 13வது திருத்தச்சட்டமே தமிழர்களுக்கு அதிகமென்று தென்னிலங்கையின் தரப்புக்கள் வாதிடுகின்ற போது, அதனை இல்லாதொழிக்க வேண்டுமென்று வாதிடுகின்ற போது, 13வது திருத்தச்சட்டத்தை விடவும் ஒரு சிறந்த அரசியல் ஏற்பாட்டை எவ்வாறு நம்மால் அடைய முடியும்? 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதிலேயே இந்தளவு சிக்கல்கள் இருக்கின்ற போது, எவ்வாறு அதனைத் தாண்டிய, ஒரு அரசியல் தீர்வை உடனடியாக அடைய முடியும்?

13இன் போதாமை தொடர்பில் பேசுகின்றவர்கள் எவரிடமும் இந்தக் கேள்விகளுக்கு பதிலில்லை. புதிய அரசியல் யாப்பு மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென்று கூறுவோருமுண்டு. குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசு கட்சி அரசியல்வாதிகள் அவ்வாறான பார்வையே முன்வைத்து வருகின்றனர். ரணில்-மைத்திரி ஆட்சிக்காலத்தில் அவ்வாறானதொரு நம்பிக்கையுடன்தான், காலம் கழிந்தது. ஆனால் புதிய அரசில்யாப்பிற்கு என்ன நடந்தது?

இப்போதும் ரணில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசுகின்றார். அதே போன்று, சந்திரிக்கா குமாரதுங்க போன்றவர்களும் பேசுகின்றனர். ஆனால் புதிய அரசியல் யாப்பின் மூலம் 13இற்கு அப்பால் செல்வதற்கான சாத்தியப்பாடு என்ன என்பதுதான் இங்குள்ள கேள்வி? 13இலுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களே பிரச்சினைக்குரியதாக நோக்கப்படுகின்றது. ஏற்கனவே 13இலுள்ள அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் அவ்வாறான அதிகாரங்களை விடவும் கூடுதலான அதிகாரங்களை வழங்கக் கூடியதொரு அரசியல் யாப்பிற்கான சாத்தியப்பாடு என்ன? புதிய அரசியல் யாப்பை கொண்டுவர வேண்டுமாயின், சர்வசன வாக்கெடுப்பிற்கு செல்ல வேண்டும் - கூடவே அதில் வெற்றிபெறவும் வேண்டும். ஒரு வேளை சர்வசன வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் அனைத்து முயற்சிகளும் கிடப்பிற்கு சென்றுவிடும். சர்வசன வாக்கெடுப்பில் வெற்றிபெற வேண்டுமாயின், சிங்கள மக்கள் பெரும்பான்மையாக ஆதரவளிக்க வேண்டும். இவ்வாறான விடயங்களுக்கான அரசில் சூழ் தென்னிலங்கையில் இருக்கின்றதா?

மூன்றாவது 13இல் ஒன்றுமில்லை, அது ஒரு தீண்டத்தகாதென்று வாதிடும் தரப்பினர் பற்றியது. இவர்கள் அடிப்படையில் அரசியலை அறிவுரீதியாக நோக்கத் தெரியாதவர்கள். அனைத்தையும் உணர்சிகரமாக நோக்குபவர்கள். இவ்வாறானவர்களிடம் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வில்லை ஆனால், இவர்களோ அனைவரையும் குற்றவாளிகளாக காண்பிக்க முயற்சிப்பார்கள். அரசியலை அறிவுரீதியாக நோக்குபவர்களை இந்திய முகவர்களென்றும், அடிவருடிகள் என்றும் பிரச்சாரம் செய்வார்கள். சமூக ஊடகங்களை மிகவும் அனாகரிகமாக பயன்படுத்துபவர்களும் இவ்வாறானவர்களே. இவர்களின் உணர்சிகரமான செயற்பாடுகள், மறுபுறம், தமிழ் மக்களுக்கான அரசியல் அடித்தளத்தையே இல்லாதொழிக்க வேண்டுமென்று எண்ணும், தென்னிலங்கை சிங்கள-பௌத்த தேசியவாத தரப்புக்களுக்கே பயன்படுகின்றது.

இப்போது, 13வது திருத்தச்சட்டத்தை ஏன் கெட்டியாக பற்றிக்கொள்ள வேண்டுமென்னும் கேள்வியை நோக்குவோம். 13வது திருத்தத்தை எதிர்ப்பவர்கள், அதன் போதாமை தொடர்பில் பேசுபவர்கள் அனைவருமே, 13வது திருத்தச்சட்டத்தை மட்டுமே கருத்தில் கொள்கின்றனர். ஒரு வேளை இதனை ஆதரிக்கும் சில தரப்புக்கள் கூட இருக்கும் ஒன்றையும் இழந்துவிடக் கூடாதென்னும் நோக்கில் பேசக் கூடும். ஆனால் இந்தக் கட்டுரை 13வது திருத்தச்சட்டத்தை கெட்டியாக பற்றிக் கொள்ளுமாறு கூறுவதற்கு பிறிதொரு காரணமுண்டு. அதவாது, தற்போதுள்ள சூழலில் 13வது திருத்தச்சட்டத்தில் என்ன இருக்கின்றது - என்ன இல்லையென்பதற்கு அப்பால், இலங்கைத் தீவில், ஈழத் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வை பேசுவதற்கான ஒரு அடிப்படையான விடயமாக, 13வது திருத்தச்சட்டம் மட்டுமே இருக்கின்றது. இங்குள்ள அடிப்படையான விடயம் கொழும்பு 13வது திருத்தச்சட்டத்தை படிப்படியாக அமுல்படுத்த வேண்டும் - அல்லது முழுமையாக இல்லாமலாக்க வேண்டும்.

ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டுவருவதன் ஊடாக 13வது திருத்தச்சட்டத்தை இல்லாமலாக்கலாம் ஆனால் அந்தப் புதிய அரசியல் யாப்பை தமிழ் மக்களின் ஆதரவுடன் கொண்டுவந்தால் மட்டுமே, இனப்பிரச்னைக்கான தீர்வை வெற்றிகொண்டதாக அரசாங்கம் அறிவிக்க முடியும். இல்லாவிட்டால், 1972 மற்றும் 1978 அரசியல் யாப்புக்களை தமிழ் மக்கள் நிராகரித்தது போன்று, இதனையும் நிராகரித்தால், நல்லிணக்க முயற்சியில் அரசாங்கம் வெற்றியை கொண்டாட முடியாது. அதே வேளை, புதிய அரசியல் யாப்பின் மூலம், 13இற்கு அப்பால் செல்லக் கூடிய அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்கினால், அதனை சிங்கள கடும்போக்குவாதிகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஏன் 13வது திருத்தச்சட்டத்தை...

எதிர்ப்பார்கள். தென்பகுதியில் மீண்டும் சிங்கள - பௌத்த சக்திகள் பலமடையும். இந்த பின்புலத்தில் புதிய அரசியல் யாப்பு முயற்சி வெற்றிபெறாது. 13வது திருத்தத்தை இல்லாதொழித்தால் அதனை விடவும் சிறந்த ஒன்றை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும், இல்லாவிட்டால் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் ஊடாக முன்னோக்கி செல்லும் பாதை அறிய வேண்டும்.

சிங்கள ஆளும் தரப்பை பொறுத்தவரையில் இது ஒரு சிக்கலான அரசியல் முடிச்சு. இதனை சிங்களவர்களாக, தனித்து அவிழ்க்க முடியாது. ஆனால் ஒரு வழி யுண்டு. தமிழர்களே இதனை வேண்டாமென்று கூறினால், 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதை அரசாங் கம் தட்டிக்கழிக்க முடியும். 13வது திருத்தத்தை இப்போதிருப்பது போன்றே பேணிப் பாதுகாத்துக் கொண்டு செல்லலாம். முழுமையான அமுலாக்கத்திற்கான காலத்தை இழுத்தடிக்கலாம். ஒரு அரசாங்கம் கூறுவதை பிறிதொரு அரசாங்கத்தின் மூலம் மறுப்பதாக விடயங்களை கையாளலாம்.

இதற்கு அரசாங்கத்திற்கு பலமானதொரு இந்திய எதிர்ப்பு தமிழர் தரப்புத் தேவை. ஏனெனில் இந்திய எதிர்ப்பு தமிழர் தரப்பொன்றாலேயே 13வது திருத்தச் சட்டத்திற்கான எதிர்ப்பை பெரியளவில் மக்கள் மயப்ப டுத்த முடியும். தற்போதுள்ள சூழலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) மட்டுமே, முதன்மையான இந்திய எதிர்ப்பு தமிழ் கட்சியாகும். ஆனால் அந்தக் கட்சி இன்னும் பலமடையுமாக இருந்தால்தான், இந்த விடயத்தை பெரியளவில் மக்க ளுக்குள் கொண்டுசெல்ல முடியும். அவ்வாறாயின் அந்தக் கட்சி பலமடைவதே தென்னிலங்கைக்கு குறிப்பாக, 13வது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டு மென்று எண்ணும் தரப்புகளுக்கு நன்மையானது. நான் இவ்வாறு கூறுவதற்கு ஒரு வலுவான காரணமுண்டு. அதாவது, இந்திய-இலங்கை ஒப்பந்தமும், அதன் அங்க மான 13வது திருத்தச் சட்டம் பலவீனப்படுத்தப்பட்ட இரண்டு சந்தர்பங்களிலும் இந்திய எதிர்ப்பு சக்திகளே முன்னணியில் இருந்திருக்கின்றன.

13வது இல்லாமல் போனால் என்ன? 13வது திருத் தச்சட்டம் இல்லாமலாக்கப்படுமாக இருந்தால், அதன் பின்னர், இலங்கைத் தீவில், தமிழ் மக்களுக்கான அதிகா ரப்பகிர்விற்கான உரையாடல் முற்றிலுமாக இல்லாம லாக்கப்படும். அதேவேளை, தமிழ் மக்களுக்கான அரசி யல் தீர்வு விடயத்தில் சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் இந்தியாவின் தலையீட்டுக்கான கதவு மூடப்படும். 13வது திருத்தச்சட்டத்தின் ஊடாக, இந்தி யாவின் தலையீட்டுக்கான சூழல் பாதுகாக்கப்படுகின்றது என்பதற்காகவே, தென்னிலங்கை கடும்போக்கு சக்திகள் 13வது திருத்தத்தை கடுமையாக எதிர்க்கின்றன. பிரதான அரசியல் கட்சிகள் இது தொடர்பில் வெளிப்ப டையாக பேசாவிட்டாலும் கூட, 13வது திருத்தச்சட் டத்தை அமுல்படுத்தாமல் விடுவதற்கான வாய்ப்பு கிடைத்தால், அதனை பயன்படுத்திக் கொள்ளவே முயற்சிப்பர் ஏனெனில் தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்பதில் எவ ருக்குமே உண்மையான கரிசனையில்லை.

இந்த பின்புலத்தில் சிந்தித்தால், சிங்கள தரப்புக்கள் எதிர்க்கும், இல்லாதொழிக்க வேண்டுமென்று எண்ணும் ஒரு விடயம் தானே, மறுபுறும் தமிழர்களுக்கு சாதகமான ஒன்றாக இருக்க முடியும்! அதுதானே தமிழர்களின் அரசியலை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான அடிப்படையாக இருக்க முடியும். அது ஒன்றுதானே, தமிழர்கள், பிராந்திய சக்தியான இந்தியாவுடன் உறவாடுவதற்கான கருவியா இருக்க முடியும். இதனை கருத்தில் கொள்ளாமல் உணர்சிவசப் படுவதால், தமிழ் மக்களின் வாழ்வில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது.

இந்த பின்புலத்தில் 13வது திருத்தச்சட்டம் தொடர்பான எனது புரிதல் அதன் உள்ளடக்கம் தொடர்பானதல்ல - மாறாக, அதன் அரசியல் மற்றும் மூலோபாய முக்கியத்துவம் தொடர்பானது. ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் பலர், மூலோபாய ரீதியாக விடயங்களை விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். உலகம் அதிகம் பிராந்தியமயப்பட்டு வருகின்றது. இந்த பின்னணியில் இந்தியாவின் முக்கியத்துவம் முன்னர் என்போதுமில்லாதவாறு அதிகரித்திருக்கின்றது. இந்த பின்புலத்தில், இந்தியாவினால் ஆர்வம் காண்பிக்கப்பட்டுவரும், ஒரு விடயத்தை, பாதிக்கப்பட்ட தமிழர்களே எதிர்ப்பது அரசியல் ரீதியில் முதிர்சியற்ற செயலாகும். எனவே 13 எதிர்ப்பு பிரச்சாரத்தை முன்னெடுப்பவர்கள் நிச்சயம் தமிழ் மக்களுக்கு நன்மை செய்யவில்லை. அவர்களின் சேவை வேறு யாருக்கோ தேவைப்படுகின்றது.

# ராஜங்கனை சத்தாரத்ன தேரரின் வங்கிக்கணக்கில் ரூ.160 மில்லியன்!

கொழும்பு, ஜூன் 23

ராஜங்கனை சத்தாரத்ன தேரரின் வங்கிக் கணக்கில் 160 மில்லியன் ரூபா வரவு வைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோட்டை நீதவான் திலின கமகேவிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிதியானது கௌதமாலா, அவுஸ்திரேலியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து அவரது கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதவானிடம் தெரிவித்தனர்.

இவ்வளவு பெரிய தொகை எவ்வாறு அவரது கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் திணைக்களத்தின் நிதிப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

பிக்குவை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.

நாட்டில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும். குற்றம் சாட்டப்பட்ட பிக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலையாகாத நிலையில், ஸ்கைப் தொழில்நுட்பத்தின் ஊடாக அவரை பரிசோதித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். (அ)

# ஜனாதிபதி முன்னிலையில் பஸில் அழுவதற்கு இடமளிக்கமாட்டோம்

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம



கொழும்பு, ஜூன் 23

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதிக்கு எதிரில் அழுவார் என்றால் அது நல்ல விடயம் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பசில் ராஜபக்ஷ எமது கட்சியின் பிரதான தலைவர் என்ற போதிலும் அவர் அழுவதற்கு அவசியம் இல்லை.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு இடமளிக்கமாட்டார்கள்.

பொதுஜன பெரமுனவுக்கு வாக்குகளை கொண்டு வந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் இருக்கின்றனர்.

இவர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்குமாறு பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்-என்றார். (அ)






# 60 குருதிக் கொடையாளர்கள் கல்முனையில் கௌரவிப்பு






அம்பாறை, ஜூன் 23

கல்முனை ஆதரவைத்தியசாலையில் 60 குருதிக்கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்தியசாலைக்கு நன்கொடைகள் வழங்கிய 60 கொடையாளர்கள் பாராட்டு நற்சான்றுகளும் நினைவு சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெ.மதன் வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலை குழுவினரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது அம்பாறை மாவட்டம், கல்முனை, துரைவந்திமேடு எனும் கிராமத்தைச் சேர்ந்த ஜனாசுகிர்தன் கிரண்யாஸ்ரீ எனும் நான்கு வயதுச்சிறுமியும் கௌரவிக்கப்பட்டார்.

இவர் மாபெரும் இரண்டு உலக சாதனைகள் படைத்துள்ளார்..

இவர் தனது இரண்டு கைகளாலும் ஆங்கில எழுத்துக்களை குறுகிய நேரத்தில் எழுதி அவர் படைத்த அவரின் சாதனையை அவரே முறியடித்து 2 உலக சாதனைகளை படைத்துள்ளார்.

(அ)

# கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை மேலும் இரு தினங்கள் திறக்கப்படும்

அம்பாறை, ஜூன் 23

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை மேலும் இரு தினங்கள் அதாவது 27 ஆம் திகதி வரை திறந்திருக்கும் என அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.என்.டக்ளஸ் அறிவித்துள்ளார்.

குறித்த காட்டுப்பாதை கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் சம்பிரதாயபூர்வமாக திறக்கப்பட்டது..

மீண்டும் அது ஜூன் 25 ஆம் திகதி மூடப்படும் என ஏலவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் களுதாவளை, நற்பிட்டிமுனை ஆலயங்களின் தீர்த்தோற்சவம் காரணமாக அந்தப் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப் பாதையை மேலும் இரு தினங்கள் திறந்து வைக்க தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இப் பாதை திறந்திருக்கும்.

கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா

உற்சவம் ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 4 திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

கடந்த வருடம் 28820 பேர் காட்டுப் பாதையில் பயணித்திருந்தனர். இம்முறை 45 ஆயிரம் பேர் அளவில் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளரை கத்தியால் குத்தியவர் கைதானார்!

அம்பாறை, ஜூன் 23

**ஓய்வுநிலைப் கல்விப்பணிப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம் முக்தாரை கொலை செய்ய எத்தனித்தவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.**

**சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர். எஸ். எல். சம்சுதீனின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் கே. எஸ். மேகவர்ன மற்றும் உப-பொலிஸ் பரிசோதகர் ஏ. எல். றஊப் ஆகியோர் அடங்கிய குழு விரைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பொருட்டாக சந்தேக நபர் கைதானார்.**

குறித்த கல்விப்பணிப்பாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாளிகைக்காட்டில் உள்ள பேக்கரி ஒன்றில் உணவு வாங்கிக்கொண்டு சாய்ந்தமருது நீர்வழங்கல் காரியாலயத்துக்கு அருகாமையில் உள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் தனது பேரப்பிள்ளையுடன் பயணித்தார்.

அவரது வீட்டின் அருகாமையில் உள்ள வீதியில் ஒழிந்திருந்த நபர், தான் ஒழித்து வைத்திருந்த கத்தியினால் கல்விப்பணிப்பாளரின் கழுத்தில் அறுத்துவிட்டு தப்பிச்செல்ல முற்பட்டவேளை காயமடைந்த கல்விப்பணிப்பாளர் தன்னைத் தாக்கிய நபரை துரத்திச் சென்றுள்ளார்.

எனினும், தாக்கிய நபர் வேகமாக தப்பிச் சென்றுவிட்டார். வீட்டுக்கு வருகை தந்த கல்விப் பணிப்பாளர் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் முதலுதவியைப் பெற்றுக் கொண்டு அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவத்தை கேள்வியுற்று சிலமணி நேரத்திற்குள் விரைந்து செயற்பட்ட சாய்ந்தமருது பொலிஸார் குறித்த நபர் சென்ற வீதிகளில் உள்ள சி.சி.ரி.வி. கமெராக்களை பரிசோதனையிட்டு தடயங்களை திரட்டியதுடன் அம்பாறை தடயவியல் பொலிஸாருடன் இணைந்து சந்தேக நபரை இனங்கண்டு கொண்டனர்.

அதன் விளைவாக குறித்த சந்தேச நபர் கடந்த புதன்கிழமை சாய்ந்தமருது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

(அ)

# நள்ளிரவில் விபத்து; இளைஞர் ஒருவர் பலி

மட்டக்களப்பு, ஜூன் 23

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெடியவட்டை பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்தார்.

சின்னவத்தையில் உள்ள ஆலய உற்சவம் ஒன்றுக்கு சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இந்த விபத்தில் 19 வயது இளைஞன் உயிரிழந்துள்ளதுடன் 23 வயது இளைஞர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்ததாகவும் படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(அ)

# சர்வதேச யோகா தினத்தில் விழிப்புணர்வு நடைபவனி

திருமலை, ஜூன் 23

சர்வதேச யோகா தினத்தை யொட்டி திருமலை வளாக கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக துணைத் தலைவர் திருமதி சந்திரவதனி ஜி.தேவதாசன் தலைமையில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு முன்னால் நேற்று முன் தினம் காலை 7.45 மணிக்கு ஆரம்பமான இந்த நடைபவனி தபாலக சந்தி வீதி வழியாகச் சென்று திருகோணமலை நகரசபைக்கு முன்னால் முடிவுற்றது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சித்த மருத்துவபீட மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



(அ)

# நாவிதன்வெளி விவேகானந்தாவில் திறன் வகுப்பறை திறந்துவைப்பு



மட்டக்களப்பு, ஜூன் 23

சம்மாந்துறைக் கல்வி வலயத்திற்குட்பட்ட நாவிதன்வெளி விவேகானந்தா மகாவித்தியலத்தில் திறன் வகுப்பறை ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கிராமப் புறப் பாடசாலை மாணவர்களும் டிஜிற்றல் வசதியில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும் எனும் நோக்குடன் அவுஸ்ரேலியாவிலுள்ள அப்பாடசாலையின் முன்னாள் அதிபர் வேலுப்பிள்ளை குடும்பத்தினரதும் மற்றும் அமெரிக்காவிலுள்ள நல்லையா பவுண்டேசனதும் முழு நிதி அனுசரணையில் வன்னி ஹோப் இலங்கை அலுவலகத்தினால் இது திறந்து வைக்கப்பட்டது.

(அ)

# ரஷ்யப் படைகளுக்கு எதிரான தாக்குதல் மெதுவாக உள்ளது

## உக்ரைன் ஜனாதிபதி ஒப்புதல்



**கீவ், ஜூன் 23**

**ரஷ்யாவுக்கு எதிரான உக்ரைனின் எதிர்த்தாக்குதல் விரும்பியதை விட மெதுவாக இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கூறினார்.**

**ஆனால் உக்ரேனிய வீரர்கள் ஆபத்தான கண்ணிவெடிகள் வழியாக நகர்ந்து வருவதால், அதை விரைவுபடுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கக்கூடாது என்று அவர் குறிப்பிட்டார்.**

“சிலர் இது ஒரு ஹொலிவுட் படம் என்று நம்புகிறார்கள். இப்போது முடிவுகளை எதிர்பார்க்கிறார்கள். அப்படி இல்லை. ஆபத்தில் இருப்பது மக்களின் வாழ்க்கை என ஒரு அவர் கூறியுள்ளார்.

உக்ரைன் எதிர்த்தாக்குதல் எதிர்பார்த்த வெற்றியை இது வரை கொடுக்கவில்லை. எதிர்பார்த்த வேகத்தில் ரஷ்ய படையை பின்தள்ளவும் முடியவில்லை. இந்த எதிர்த்தாக்குதலில் உக்ரைன் கணிசமான இழப்பையும் சந்தித்துள்ளது. இது வரை எட்டு கிராமங்களை மீட்டுள்ளதாகக் கூறியுள்ளது. இருப்பினும், ரஷ்யா அமைத்துள்ள முக்கிய தற்காப்பு நிலைகளை உக்ரைனியப் படைகள் இன்னும் சமாளிக்கவில்லை. ரஷ்யா பல மாதங்களாக இந்த தற்காப்புக் நிலைகளைத் தயாரிக்க எடுத்துக் கொண்டுள்ளது. உக்ரைன் தாக்குதலுக்காக ஆயிரக்கணக்கான துருப்புக்களைக் கொண்ட 12 படைப்பிரிவுகளை ஒதுக்கியுள்ளதாக நம்பப்படுகிறது.

இந்த துருப்புக்களில் பெரும்பாலானவை இன்னும் சண்டையில் சேரவில்லை. 200,000 சதுர கிமீ (77,220 சதுர மைல்கள்) உக்ரைனியப் பிரதேசம் ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

“எங்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான முயற்சிகள் உட்பட, சிலர் என்ன விரும்பினாலும், அனைத்து மரியாதையுடன், நாங்கள் சிறந்ததாகக் கருதும் விதத்தில் நாங்கள் போர்க்களத்தில் முன்னேறுவோம்” என்று ஜெலென்ஸ்கி மேலும் கூறினார்.

தாக்குதலில் ஆரம்பத்தில் சில கிராமங்களை கைப்பற்றியதாக உக்ரைன் கூறியது. பிறகு, கடந்த வாரம் மேலும் ஒரு கிராமத்தை மட்டுமே கைப்பற்றியதாக கூறியுள்ளது.

உக்ரைனின் பொருளாதாரம் மற்றும் புனரமைப்புக்கு உதவியளிக்கும் நட்பு நாடுகளின் மாநாடு நடைபெறும் சமயத்தில் ஜெலன்ஸ்கியின் இந்த கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இந்த மாநாட்டில் நட்பு நாடுகள் பில்லியன் கணக்கான டொலர்களை பொருளாதார மற்றும் புனரமைப்பு உதவியாக உறுதியளிக்கவேண்டும் என உக்ரைன் எதிர்பார்ககிறது.

வொஷிங்டன் 1.3 பில்லியன் டொலர் வழங்கியது. உக்ரைனின் பிரதமர் டெனிஸ் ஷ்மிஹால் இந்த மாநாட்டிலிருந்து 6 பில்லியன் டொலருக்கும் அதிகமாக எதிர்பார்ப்பதாக கூறினார்.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஏற்கனவே பல பில்லியன் டொலர்களை மனிதாபிமான மற்றும் இராணுவ உதவியாகக் கொட்டியுள்ளது.

உக்ரைனுக்கு வழங்கப்பட்ட இராணுவ உபகரணங்களில் நூற்றுக்கணக்கான டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் அடங்கும். இந்த உதவியின் விளைவாக உக்ரைனின் எதிர் தாக்குதல் வெற்றியை மேற்கு நாடுகள் எதிர்பார்க்கின்றன.

உக்ரைனின் ஆதரவாளர்களில் சிலர், வரும் வாரங்களில் போர்க்களத்தில் உக்ரைன் ஈர்க்கக்கூடிய முடிவுகளைக் காட்ட வேண்டும் அல்லது மேற்கு நாடுகளில் அரசியல் ஆதரவு குறையும் அபாயம் உள்ளது என்று கவலைப் படுகிறார்கள்.

(அ)

# ஜின்பிங்கை சர்வாதிகாரிகளுடன் ஒப்பிட்டார் அமெரிக்க ஜனாதிபதி

*கலிபோர்னியா, ஜூன் 23*

சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்கை சர்வாதிகாரிகளுடன் ஒப்பிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உரையாறியுள்ளார்.

கலிபோர்னியா மாநிலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிதி சேரிப்பு பிரசார நிகழ்வொன்றில் ஜனாதிபதி ஜோ பைடன் பங்குபற்றினார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்-

சீனாவின் பலூனை சுட்டு வீழ்த்தியபோது, ஸீ ஜின்பிங் ஏன் மிக கவலையடைந்தார் என்றால், பலூனில் உளவு உபகரணங்கள் இருந்தமை அவருக்குத் தெரியாது. அதுதான் சர்வாதிகாரிகளுக்கு அது பெரும் சங்கடமாகும். ஏனெனில் அங்கு என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியாது-என்றார்.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ரனி பிளிங்கன், சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்கை சந்தித்து கலந்துரையாடினார்.



இச்சந்திப்புக்கு மறுநாள், சீன ஜனாதிபதியை சர்வாதிகாரிகளுடன் ஒப்பிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உரையாற்றியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்க வான் பரப்பில் பறந்த சீனாவின் பாரிய பலூனை அமெரிக்கா சுட்டுவீழ்த்தியது. அது உளவு பலூன் என அமெரிக்கா கூறியது. எனினும், அது உளவு பலூன் அல்ல எனக் கூறிய சீனா, பலூன் சுட்டுவீழ்த்தப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்திருந்தது.

இதேவேளை, ஜோ பைடனின் கருத்துக்கு சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் இது தொடர்பாக கூறுகையில், ஜனாதிபதி பைடனின் கருத்து, அபத்தமானதும் பொறுப்பற்றதுமாகும் எனக் கூறியுள்ளார்.

இது ஒரு பகிரங்க அரசியல் ஆத்திரமூட்டல் எனவும் அவர் விமர்சித்துள்ளார். (அ)

# பிரான்ஸின் பாரிஸ் நகரில் பெரும் வெடிப்புச் சம்பவம்!

## பலர் காயம்!! கட்டடங்களில் தீ!!!



*பாரிஸ், ஜூன் 23*

பாரிஸ் நகரின் ஐந்தாவது நிர்வாகப் பிரிவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பெரும் வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 29 பேர் காயமடைந்துள்ளனர்.

பிளேஸ் அல்போன்ஸ் லவர்ரோன் என்ற இடத்தில் அமைந்துள்ள அமெரிக்கன் அக்கடமி கட்டடத்திலேயே வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது. அது எரிவாயுவினால் ஏற்பட்டது என்று முதலில் வெளியாகிய தகவல்கள் தெரிவித்தன. வெடிப்பினால் எழுந்த தீ அருகே இருந்த கட்டடங்களுக்குப் பரவியுள்ளது.

நகர வாசிகள் இசைத் திருவிழாவைக் கொண்டாடி மகிழத் தயாராகிக் கொண்டிருந்த சமயத்தில் நேற்று முன் தினம் மாலை 17.00 மணியளவில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

குறைந்தது ஏழு பேர் ஆபத்தான கட்டடத்தில் உள்ளனர். மருத்துவக் குழு ஒன்று அந்த இடத்தில் சேவையில் ஈடுபட்டது.

அமெரிக்கன் அக்கடமி கட்டடத்தின் முன் பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது. அந்தக் கட்டடத்தில் பஷன் மற்றும் டிசைன் துறை மாணவர்களது பாடசாலை இயங்குகின்றது. இடிபாடுகளிடையே எவராவது சிக்குண்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. கட்டடத்தில் உள்ள அலுவலக அறைகளில் இருந்த சிலரும் சிறு காயமடைந்துள்ளனர்.

பாரிஸ் நகர மேயர் ஆன் கிடல்கோ நகர அதிகாரிகள் சகிதம் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்று அவசர காலப் பணிகளை பார்வையிட்டார்.

வெடிப்பு நடந்த பிரதேசத்தை தவிர்த்துப் பயணிக்குமாறு பாரிஸ் பொலிஸ் தலைமையகம் பொதுமக்களைக் கேட்டிருக்கிறது. (அ)

# ரஷ்யா மீது மேலும் பொருளாதார தடை

## விதிக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

*பிரஸ்ஸல்ஸ், ஜூன் 26*

உக்ரைன் போருக்கு எதிராக ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இந்த வாரத்தின் பிற்பகுதியில், எழுத்துபூர்வ நடைமுறையின் மூலம் தடைகள் அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, எவ்வாறான பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து விவரங்கள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பெப்ரவரி 24, 2022 அன்று ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது படைகளை உக்ரைனுக்குள் அனுப்ப உத்தரவிட்டதிலிருந்து ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யா மீது 10 சுற்று தடைகளை விதித்துள்ளது.

இதனால் ரஷ்யா மிகப் பெரிய இழப்பைச் சந்தித்துள்ளதுடன், 1000 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் சொத்து முடக்கத்தை எதிர்கொள்கிறார்கள்.

(அ)

ஈழநாடு






## இலங்கை வருகின்றது பாகிஸ்தான் அணி!

கொழும்பு, ஜூன் 23

இலங்கைக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி அடுத்த மாதம் இலங்கை வருகிறது.

இந்த டெஸ்ட் தொடர் 2023 - 2025 ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடராக அமைகிறது.

ஜூலை மாதம் 9ஆம் திகதி இலங்கை வருகை தரவுள்ள பாகிஸ்தான், காலி சர்வதேச அரங்கில் ஜூலை 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கையை எதிர்த்தாடும்.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பில் ஜூலை 24ஆம் திகதி ஆரம்பமாகும்.

கடந்த வருடம் இலங்கையில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட தொடர் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

பாகிஸ்தானுக்கு கடைசியாக 2019இல் சென்ற இலங்கை அங்கு ஒரு போட்டியை வெற்றி - தோல்வியின்றி முடித்துக்கொண்டதுடன் மற்றைய போட்டியில் 263 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

பாகிஸ்தான் அணி விவரம்:

பாபர் அஸாம் (தலைவர்), மொஹமத் ரிஸ்வான் (உப தலைவர்), அப்துல்லா ஷபிக், அமிர் ஜமால், இமாம் உல் ஹக், மொஹமட் ஹூரெய்ரா, மொஹமட் நவாஸ், நசீம் ஷா, நோமான் அலி, சல்மான் அலி அகா, சர்பராஸ் அஹ்மத், சாவுத் ஷக்கீல், ஷஹீன் அப்றிடி, அப்ரார் அஹ்மத், ஹசன் அலி, ஷான் மசூத்.

## டெஸ்ட் போட்டி தரவரிசை; முதலிடத்தில் ஜோ ரூட்!

டுபாய், ஜூன் 23

டெஸ்ட் வீரர்களின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையை ஐ. சி. சி. நேற்று வெளியிட்டது. இதில், இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் முதலிடத்துக்கு முன்னேறினார்.

அண்மையில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஷ் முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் சதம் மற்றும் 2ஆவது இன்னிங்ஸில் 46 ஓட்டங்கள் எடுத்து சிறப்பாக விளையாடியதால் அவர் 883 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

முதலிடத்தில் இருந்த அவுஸ்திரேலிய வீரர் லபுஷான் 2வது இடத்திலும் அவுஸ்திரேலிய வீரர் டிராவிஸ் ஹெட் 3ஆவது இடத்துக்கும் பின்தள்ளப்பட்டனர். (ஐ)




### உலகக் கிண்ண தகுதி சுற்று:

# கடைசிப் பந்துவரை பரபரப்பு ஸ்கொட்லாந்து த்ரில் வெற்றி!

புலவாயோ, ஜூன் 23

சிம்பாப்வே நாட்டில் நடைபெற்று வரும் ஐ. சி. சி. ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தகுதி சுற்று தொடரின் போட்டியில் அயர்லாந்து அணிக்கு எதிராக கடைசி பந்தில் த்ரில் வெற்றி பெற்றுள்ளது ஸ்கொட்லாந்து. அந்த அணிக்கு போட்டி வெற்றியாளராக ஜொலித்தார் மைக்கல் லீஸ்க்.

எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பரில் இந்தியாவில் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்கேற்க உள்ள 8 அணிகள் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2 அணிகள் உலகக் கிண்ணத் தகுதிச் சுற்று மூலம் உறுதி செய்யப்பட உள்ளது.

அந்த 2 அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதி சுற்று சிம்பாப்வே நாட்டில் தற்போது நடைபெற்று வருகிறது. மொத்தம் 10 அணிகள் இதில் பங்கேற்று விளையாடி வருகின்றன. இதில் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் இரண்டு அணிகள் உலகக் கிண்ணத் தொடரில் விளையாட தகுதி பெறும்.

இந்தத் தொடரில் குழு சுற்றுப் போட்டியில் அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து அணிகள் நேற்று முன்தினம் பலப்பரீட்சை செய்தன. முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 50 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 286 ஓட்டங்கள் எடுத்தது. அயர்லாந்து வீரர் கர்டிஸ் கேம்பர் 108 பந்துகளில் 120 ஓட்டங்கள் எடுத்தார். ஜார்ஜ் டோக்ரெல், 69 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அதனால் 287 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஸ்கொட்லாந்து விரட்டியது.

ஸ்கொட்லாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர் கிறிஸ்தோபர் மெக்பிரைட் 60 பந்துகளில் 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அந்த அணி 33.5 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 152 ஓட்டங்கள் எடுத்து தடுமாறியது. 8ஆவது விக்கெட்டுக்கு மைக்கல் லீஸ்க் மாறும் மார்க் வாட் இணைந்து 82 ஓட்டங்கள் எடுத்தனர். மார்க், 43 பந்துகளில் 47 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். பின்னர் வந்த சப்யான் ஷெரீப் உடன் 50 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் லீஸ்க்.



கடைசி ஓவரில் ஸ்கொட்லாந்தின் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முதல் பந்தில் பௌண்ட்ரியும், இரண்டாவது பந்தில் ஓர் ஓட்டமும் எடுத்தார் லீஸ்க். மூன்றாவது பந்தில் ஷெரீப் ஆட்டமிழந்தார். நான்காவது பந்தை எதிர்கொண்ட கிறிஸ் சோல், ஓட்டம் எடுக்கவில்லை. ஐந்தாவது பந்தில் பைஸில் ஓர் ஓட்டம் எடுத்தார். கடைசி பந்தில் ஸ்கொட்லாந்து வெற்றிக்கு 2 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த பந்தை பௌண்ட்ரிக்கு விரட்டி த்ரில் வெற்றி தேடி தந்தார் லீஸ்க்.

அவர் 61 பந்துகளில் 91 ஓட்டங்கள் எடுத்தார். 9 பௌண்ட்ரி மற்றும் 4 சிக்ஸர்கள் இதில் அடங்கும். ஆட்ட நாயகன் விருதையும் அவர்தான் வென்றார். ஒரு விக்கெட் வித்தியாசத்தில் ஸ்கொட்லாந்து வெற்றி பெற்றது. 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 280 ஓட்டங்கள் எடுத்தது ஸ்கொட்லாந்து. இந்த தொடரில் அயர்லாந்து அணி தொடர்ச்சியாக இரண்டு போட்டிகளில் தோல்வியை தழுவி உள்ளது. (ஐ)




## மேற்கிந்தியாவுடனான ரி -20; ஹார்திக் பாண்ட்யா தலைவர்?

புதுடில்லி, ஜூன் 23

மேற்கிந்தியாவுக்கு எதிரான இருபது - 20 போட்டியில் இந்திய அணியை ஹார்திக் பாண்ட்யா வழிநடத்துவார் என்று தெரிய வருகின்றது. அத்துடன், ரோஹித் சர்மா அணியில் தொடர்ந்தும் விளையாடுவார் என்றும் கூறப்படுகின்றது.

இந்திய அணி அடுத்த மாதம் மேற்கிந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது. இந்த சுற்றுப்பயணத்தில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிகளை ரோஹித் சர்மா வழிநடத்துவார்.

இருபது - 20 அணிக்கு ஹார்திக் பாண்ட்யா பொறுப்பேற்பார். டெஸ்ட் தொடரில் இருந்து ரோஹித்துக்கு ஓய்வு அளிக்கப்படலாம் என்றும், வேறொருவர் தற்காலிகமாக பொறுப்பேற்கலாம் என்றும் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் அந்த வதந்திகளுக்கு இந்திய கிரிக்கெட் சபை மூத்த அதிகாரி ஒருவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். ரோஹித் சர்மா இந்த சுற்றுப்பயணத்தில் இருக்கிறார்.

மேலும் கே. எல். ராகுல், ஷ்ரேயாஸ் ஐயர் மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் காயத்தில் இருப்பதால் இந்த தொடரில் பங்கேற்கவில்லை. எனவே, புஜாரா தனது இடத்தை தக்கவைத்துள்ளார். புஜாரா இருந்தபோதிலும், இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கு சர்பராஸ் கான் போன்ற ஒருவரை சேர்க்க தேர்வாளர்கள் ஆர்வமாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இங்கிலாந்து, ஆஸி. அணிகளுக்கு 40 சதவீதம் அபராதம் விதித்தது ஐ. சி. சி.!

லண்டன், ஜூன் 23

ஆஷஷ் டெஸ்ட் தொடரின் முடிவடைந்த முதல் போட்டியில் இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கு 40சதவீதம் ஊதியத்தில் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது ஐ. சி. சி.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான ஆஷஷ் தொடரின் முதல் போட்டி இங்கிலாந்தில் விறுவிறுப்பாக நடைபெற்றது.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இரு விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதனைத்தொடர்ந்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற புள்ளிக்கணக்கில் ஆஸ்திரேலியா அணி முன்னிலை பெற்றுள்ளது.

இந்த நிலையில் இந்த போட்டியில் பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்காக இரு அணிக்கும் போட்டி கட்டணத்தில் தலா 40 சதவீதம் அபராதம் விதித்து சர்வதேச கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது. (ஐ)








# கலாசாலையில் யோகா தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னெடுத்த சர்வதேச யோகா தின நிகழ்வும் வாராந்த ஒன்றுகூடலும் நேற்று வியாழக்கிழமை காலை கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது

இந்நிகழ்வில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி கலந்து கொண்டு ஆன்மீக நோக்கில் கல்வி என்ற பொருளில் உரையாற்றியதோடு யாழ். இந்திய துணைத் தூதரகத்தால் நடத்தப்பட்ட யோகாசனப் பயிற்சியில் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ்களையும் வழங்கினார். (அ)

# உருளைக்கிழங்கு கொள்கலனில் பெருந்தொகையான ஹெரோயின்

கொழும்பு, ஜூன் 23

கொள்கலன் ஒன்றில் இருந்து பெருந்தொகையான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து வந்த உருளைக்கிழங்கு அடங்கிய கொள்கலனில் இந்த ஹெரோயின் தொகை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சுமார் 15 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# குப்பைத்தொட்டிக்குள் எறிந்து குழந்தையை கொல்ல முயற்சி

கொழும்பு, ஜூன் 23

தம்புத்தேகம பகுதியில் குழந்தையொன்றை குப்பைத் தொட்டியில் வீசியெறிந்து கொலை செய்ய முயற்சித்த சம்பவம் ஒன்று பதிவாகி உள்ளது.

குழந்தையை வீசியெறிந்த பெண் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தம்புத்தேகம பகுதியை சேர்ந்த 33 வயதுடைய பெண் ஒருவர் கடந்த 16 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் வீட்டில் குழந்தையொன்றை பிரசவித்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி குழந்தை குப்பைத்தொட்டியில் வீசப்பட்ட நிலையில் பொது மக்களின் தகவலுக்கமைய பொலிஸாரால் அது மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டுள்ள குழந்தை மற்றும் குழந்தையின் தாய் ஆகியோர் தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதி ரணில் கூறும் அழகிய உலகம் 2048இல் பிறக்கும்வரை பட்டினி கிடப்பதா?

## சபையில் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி




கொழும்பு, ஜூன் 23

**ஜனாதிபதி பேசும் அழகிய உலகம் 2048 இல் பிறக்கும் வரை இன்னும் 25 வருடங்களுக்கு மக்களை பட்டினியாக வைத்திருக்க முடியுமா ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த ஒத்திவைப்புவேளை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை முழுமையாக அபிவிருத்தியடைந்த நாடாக மாறும் என ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அழகான உரையை உரையாற்றியதாக தெரிவித்த திஸ்ஸ அத்தநாயக்க, இலங்கையில் வறுமை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகவும், 33 வீதமான மக்கள் மூன்று வேளை உணவு உண்பதில்லை எனவும் உலக வங்கி கணித்துள்ளதாக கூறினார்.

48 வீதமான மக்கள் உட்கொள்ளும் உணவின் அளவு குறைக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டின் கடன் சுமை அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# அதிகரித்து வரும் கொலைகள் பொருளாதாரத்துக்கும் பாதிப்பு

## சுட்டிக்காட்டுகிறார் முன்னாள் டி.ஐ.ஜி.

கொழும்பு, ஜூன் 23

துப்பாக்கிப் பாவனையினால் அதிகரித்து வரும் கொலைகள் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக குற்றவியல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

தனியார் நிகழ்ச்சி ஒன்றில் வழங்கிய நேர்காணல் ஒன்றில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாட்டவர்கள் இந்நாட்டில் முதலீடு செய்யும் போது நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைகளின் எண்ணிக்கையை விடவும் இவ்வருடம் இதுவரை அதிக எண்ணிக்கையிலான மனிதக் கொலைகள் பதிவாகியுள்ளன.

இவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் சமூகத்தின் பாதுகாப்பு அழிந்து வருகிறது.

சமுதாயத்தில் பெருமளவில் துப்பாக்கிப் புழக்கம் அதிகரித்துள்ளதால், நகர்ப்புற சமுதாயத்தில் பயன்படுத்தப்படும் தானியங்கி ஆயுதங்களைக் களைய சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ)

# அலுவலக அதிகாரிகளின் விவரம் திரட்டும் அமைச்சு

கொழும்பு, ஜூன் 23

தற்போது அமைச்சுகள், மாகாண சபைகள், ஆணைக்குழுக்கள் மற்றும் மாவட்ட செயலக அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் புதுப்பித்த தகவல்களை வழங்குமாறு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் மேலதிக செயலாளர் பி.டபிள்யூ. ராஜபக்ஷ இது குறித்து அமைச்சுச் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், அனைத்து ஆணைக்குழு செயலாளர்கள், அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு இது தொடர்பில் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

உத்தியோகத்தர்களின் பணி நியமனம், இடமாற்றம் மற்றும் ஆட்சேர்ப்பு ஆகிய செயல்பாடுகளை மிகவும் உகந்த முறையில் மேற்கொள்ள இந்தத் தகவல்கள் அவசியமானது என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னர், அரச தழுவிய சேவைப் பதவிகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் தகவல்களை வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சின் எல்லைக்குட்பட்ட திணைக்களங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் தகவல்கள் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்படவேண்டுமென மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# துப்பாக்கி தவறுதலாக வெடித்து 16 வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 23

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 16 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

அம்பன்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே நேற்று முன் தினம் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பன்வெல கெத்பஹுவ பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தையடுத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய சிறுவன் கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வயல்வெளியிலிருக்கும் குடிசையில் தனித்திருக்கும் போது குறித்த சிறுவன் துப்பாக்கியைக் கையாண்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதையடுத்து வயலில் அன்றாட வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த சிறுவனின் பெற்றோர் குடிசைக்கு விரைந்து வந்து பார்த்த போது சிறுவன் காயமடைந்து கிடந்துள்ளான். அவனை வைத்தியசாலையில் அனுமதித்த போது அவன் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் அம் பன்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# படியிலிருந்து விழுந்து 11 மாத குழந்தை பலி!

கொழும்பு, ஜூன் 23

தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுல்ல பிரதேச சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற கொண்டாட்ட நிகழ்வின்போது, பாதாளக் கிணற்றின் படியில் இருந்து தவறி விழுந்து குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை பலத்த காயங்களுடன் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்துள்ளது.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு வயது 11 மாத குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

பாதாளக் கிணற்றின் உரிமையாளரின் லொறிச் சாரதியின் குழந்தையே இவ்வாறு படிக்கட்டில் ஏறும்போது கீழே விழுந்தது.

நிகழ்ச்சிக்கு முன்னதாக பாதாளக் கிணற்றின் பாதுகாப்பு மற்றும் அலங்காரத்திற்காக குழந்தையின் தந்தை வந்திருந்த போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## யாழ்...

இதன்படி, பெண்கள் பாடசாலைகளில் வகுப்புகள் ரீதியாக மாணவிகளின் பெற்றோரின் கைபேசி இலக்கங்கள் கொண்ட 'வட்ஸ் அப்' குழு உருவாக்கப்படும். இதனை வகுப்பு ஆசிரியர் நிர்வகிப்பார். அந்தக் குழுவில் மாணவிகளின் வரவு உள்ளிட்ட அவதானிப்புகளை ஆசிரியர் பதிவிடுவார். இதன் மூலம், மாணவிகளின் பெற்றோருக்கு தமது பிள்ளைகள் குறித்த விடயங்கள் தெரியவரும்.

அத்துடன், மாணவிகள் பாடசாலைக்கு வரும் வாகன விவரங்கள், சாரதிகளின் கைபேசி இலக்கங்கள் போன்றவையும் இந்தக் குழுக்களில் பகிரப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை உடனடியாக நடைமுறைக்கு வருவதுடன், இந்தக் குழுக்கள் உரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படும் என்றும் மாவட்ட பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (ஐ)

## அதிகாரப்...

சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40ஆவது ஆண்டு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 20ஆம் திகதி பங்கேற்றிருந்தார். இதன்போது, கனடாவின் முன்னாள் பிரதமரும் சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் தலைவருமான ஸ்டீபன் ஹூப்பர் ஜனாதிபதியை நேர்கண்டார்.

இதன்போது, "இலங்கையில் உள்நாட்டு போர் நிலவியது. முன்னையவர்களின் ஆட்சி எப்படி முடிந்தது என்பதை நாங்கள் அனைவரும் அறிவோம். அனைத்து சவால்களுக்கும் மத்தியில் தமிழ் சமூகத்துக்கும் ஒட்டுமொத்த நாட்டுக்கும் இடையே எவ்வாறு நல்லிணக்கத்தை மேம்படுத்துகிறீர்கள்", என்று ஸ்டீபன் ஹூப்பர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, நல்லிணக்கத்துக்கான செயல் முறையை நான் பிரதமராக இருந்த போது தொடங்கினேன். அதனால், நான் முடிந்த இடத்திலிருந்து தொடர்கிறேன். தமிழ் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நான் பேசுகிறேன். அவர்களுடன் பல முக்கிய விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்ட வரைவு உருவாக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே மூன்று முக்கிய பிரச்சனைகள் இருந்தன. அவற்றில் இரண்டுக்கு தீர்வுகாணப்பட்டு விட்டது. பயங்கரவாதத்தின் வரையறை சிக்கலுக்கு நீதிமன்றம் மூலமே தீர்வு காணப்பட்டது.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களின் காணிப் பிரச்சனைகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டன. காணி பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் காணாமல் போனோர் பணிமனை நடவடிக்கை எடுத்து வருகிறது. நாங்கள் அரைவாசி பிரச்னைகளை கடந்து விட்டோம். இறுதியாக அதிகாரங்களை பகிர்வது குறித்து நான் தமிழ் கட்சிகளுக்கு சாத்தியமான தீர்வுகளை முன்வைத்துள்ளேன். தேவையான சட்ட நடைமுறைகளுக்கு அமைய கால அவகாசத்தை ஒப்புக்கொண்டு ஜூலை மாத இறுதிக்குள் ஒரு விரிவான செயல் முறையை முன்வைக்க எதிர்பார்க்கிறேன் - என்றார்.

இது தவிர, நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயன்முறையை செப்ரெம்பர் மாதத்துக்குள் இறுதி செய்யப்படும். கடன் மறுசீரமைப்பு முக்கியம் பெறும் அதேநேரத்தில் கட்டமைப்பு சீர்திருத்தங்களை செய்வதிலும் முதன்மை கவனம் கொண்டுள்ளோம் - என்றும் தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதி...

நடத்தப்பட்டது.

இதேநேரம், கடந்த 19ஆம் திகதி பிரிட்டனுக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு லண்டனில் இரு இடங்களில் எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மக்களை...

வாழ்ந்தனர். எனினும், தற்போது இந்த எண்ணிக்கை 70 இலட்சமாக அதிகரித்துள்ளது. நாட்டின் மக்கள் தொகையில் 31 வீதமானவர்கள் வறுமை நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மக்களை வறுமைக்குள் தள்ளிய அரசாங்கமே தற்போதும் ஆட்சியில் உள்ளது.

வறுமை நிலைமையுடன் நாடு தற்போது எந்த இடத்தில் இருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்திடம் மாத்திரமே இலங்கை பாதுகாப்பை பெற்றுக் கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்ட விடயங்களில் 28 வீதமான விடயங்களையே இலங்கை நிறைவேற்றியுள்ளது. இன்னும் 72 வீதமான விடயங்களை நிறைவேற்ற வேண்டும்.

நாட்டு மக்களின் வருமானம் குறைந்துள்ளது. நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் கொள்கை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை காணமுடியவில்லை. மறைமுக வரிகளை அதிகரிக்கும் வேலைத் திட்டத்தையே அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

நேரடியான வரிகளை அறவிடும் வேலைத்திட்டத்தை குறைந்தளவிலேயே நடைமுறைப்படுத்தியுள்ளனர். 18 வயதில் இருந்து வருமான வரி கோப்புகளை திறக்க வேண்டும் கூறப்படும் நிலையில் மிக நீண்டகாலம் சென்ற பின்னரே இந்த திட்டத்தின் ஊடாக நாட்டுக்கு வருமானம் கிடைக்கும்.

நாட்டில் வரி ஏய்ப்பு செய்தவர்கள் பலர் இருக்கின்றனர். இவர்கள் தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுத்து அவர்களிடம் வரியை அறவிட வேண்டும் அல்லது பணத்தை பெற்று அரசுக்கு வருமானத்தை பெறும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். ஏன் இதனை செய்வதில்லை என்ற கேள்வி எழுகிறது - என்றும் சொன்னார்.

## புலிகளுடன்...

தெரிவிக்கையில்-

ரணில் கற்பனை உலகில் இருந்து கொண்டு பொருளாதாரம் பற்றி பேசுகிறார். 2048இல் இலங்கை பொருளாதாரத்தில் முன்னணியில் இருக்குமென்றும் தற்போது மக்களை தியாகம் செய்யுமாறும் கேட்கிறார்.

யாரோ திருடி நாட்டை வங்குரோத்தாக்கி விட அதற்காக மக்களை விலைகொடுக்கக் கேட்பது நியாயமற்றது. நாட்டை பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாக்கியது யார் என்பதை ரணில் இது வரை சொல்லவில்லை. 2018ஆம் ஆண்டு அல்ல, இந்த காலத்தில் வாழும் மக்களில் கவனம் செலுத்தவேண்டும். இன்று மக்கள் சாப்பிட வழியில்லாமல் இருக்கிறார்கள். அரசிடம் எந்தப் பொருளாதாரத் திட்டமுமில்லை.

வரியை கோட்டாபய நீக்கியதை ஆளும் தரப்பினர் பெருமையாக பேசுகிறார்கள். நாட்டை அழித்தார்கள். அனைத்து தவறும் செய்தார்கள் - கொள்ளையடித்தார்கள். நாங்கள் அரசுக்கு ஆதரவளிக்கவில்லை என்கிறார்கள். நீங்கள் கொள்ளையடிக்க, நாங்கள் கைகட்டி ஆதரவளிக்கவேண்டுமென விரும்புகிறீர்களா? அது நடக்காது.

ஜனாதிபதி தற்போது லண்டன் சென்றுள்ளார். அங்கு ரெலிக்கொம்மை புலிகளுடன் தொடர்புடைய ஒருவருக்கு விற்பனை செய்ய பேச்சு நடத்தியுள்ளார்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தொல்பொருள் முக்கியத்துவமுள்ள இடங்களில் கைவைக்கவேண்டாம் என ஜனாதிபதியிடம் கேட்கிறேன். அதில் கைவைத்தால் கடந்த காலத்தில் அடைந்த தோல்வியையே அடைய வேண்டி வரும் - என்றார். (அ)

# கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தில் நாடு 9 வருடம் பின்னோக்கி சென்றது!

**ஹர்ஷ டி சில்வா எம். பி.**



கொழும்பு, ஜூன் 23

கோட்டாபய ராஜபக்‌ஷவின் இரண்டரை வருட கால ஆட்சியில் நாடு ஒன்பது ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளது. பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் இன்று பொறுப்பில் இருந்து விலகும் வகையில் கருத்துரைக்கிறார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய தேசிய கடன் மறுசீரமைக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுவது அடிப்படையற்றதாகும். ஒட்டுமொத்த கடன்களையும் மறுசீரமைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டது.

தேசிய கடன்களை மறுசீரமைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மார்ச் மாதம் 06 ஆம் திகி சர்வதேச நாணய நிதியத்துக்கு நிதியமைச்சர் என்ற ரீதியில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். 2048 ஆம் ஆண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். பொருளாதார விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

2022 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் தனிநபர் ஒருவரின் வருமானம் 3, 400 டொலராக குறைவடைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் இரண்டரை வருட ஆட்சி காலத்தில் நாடு 9 ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளது.

2048ஆம் ஆண்டு நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் ஒவ்வொரு ஆண்டும் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும். ஆகவே பொருளாதார முன்னேற்றத்தை அரசியல் காரணிகளை அடிப்படையாக கொண்டு குறிப்பிட முடியாது - என்றார். (ஐ)

## யாழ். நூலகத்தை..

பொக்கிசம் என வர்ணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இலட்சக்கணக்கான புத்தகங்களை ஐக்கிய தேசிய கட்சியினர் எரித்தனர். வீட்டில் இருந்த 3ஆயிரம் புத்தகம் எரிக்கப்பட்டதாக நீலிக்கண்ணீர் வடிக்கும் ரணில் இதற்கு என்ன பதில் கூறப்போகின்றார். அந்த நூலகம் எரிக்கும் போது ரணில் என்ன செய்துகொண்டிருந்தார். அவரின் கட்சி உறுப்பினர்கள் எரித்ததற்கு எதிராக இது வரை ரணில் செய்தது என்ன என்றும் - என்றும் கேள்வி எழுப்பினார். (ஐ)

## பயங்கரவாத...

அனைத்து இன மற்றும் மத சமூகங்களிலிருந்தும் அனைத்து இலங்கையர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு செயல்முறையைத் தொடங்குவதற்கான அடிப்படையை வழங்க முடியும்," என்று அவர் கூறினார்.

எவ்வாறாயினும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து இலங்கை தொடர்பான முக்கிய குழு கவலையடைவதாக ரீட்டா பிரெஞ்ச் கூறினார்.

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவதற்கான ஒரு தொடர்ச்சியான முயற்சியை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் எனவும், பயங்கரவாத சட்டம் இலங்கையின் சர்வதேச கடமைகளுடன் ஒத்துப்போவதை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். கருத்து சுதந்திரம் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றைப் பாதுகாக்க நாங்கள் அரசாங்கத்தை அழைக்கிறோம்",என்று ரீட்டா பிரஞ்ச் கூறினார்.

நல்லிணக்கத்திற்கான தனது உறுதிப்பாட்டை இலங்கை முன்னெடுத்துச் செல்லும் போது, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், கடந்த கால வேலைகள், முரண்பாடுகள் மற்றும் தண்டனை இன்மைக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்யும் பரிந்துரைகளை அர்த்தமுள்ளதாக கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக கோர் குழு தெரிவித்துள்ளது.

"நாட்டின் தேர்தல் முறைகள் மீது வாக்காளர்களின் நம்பிக்கையை பேணுவதன் மூலமும், அதன் நிறுவனங்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதன் மூலமும் இலங்கை தனது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது" எனவும் ரீட்டா தெரிவித்தார். (ஐ)

## ரணிலுக்கு...

கடிதம் ஒன்றின் மூலம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

சர்வதேச குற்றங்கள் குறித்த கடிதத்தில் மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் பான் கீ மூனால் சார்ள்ஸ் பெட்றியின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் 70 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டமை மற்றும் மானுடத்துக்கு எதிரான குற்றங்களும் போர்க் குற்றங்களும் நடைபெற்றமைக்கு நம்பத் தகுந்த சாட்சியங்கள் இருந்தமையையும் சுட்டிக்காட்டி, அத்துடன் பேர்லின் மக்கள் தீர்ப்பாயம் இனப்படுகொலை தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றது என்பதையும் சுட்டிக்காட்டி இந்த சர்வதேச குற்றங்களைப் புரிந்த எவருமே நீதியின் முன் நிறுத்தப்படவில்லை என்பதையும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் இந்த சர்வதேச குற்றங்களுக்கான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை 30/1 தீர்மானம் இலங்கையின் உள்நாட்டு நீதிப்பொறிமுறை காத்திரமான ஒன்றல்ல என்பதை எடுத்துக் காட்டுகிறது என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை "பின்னோக்கி நியாயாதிக்கத்தை" ஏற்றுக் கொள்வதுடன் 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற பிரான்ஸ் நிறுவன செயல்பாட்டாளர்களின் படுகொலைக்கும், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட 70 ஆயிரம் பொது மக்களுக்கும் நீதி வழங்குவதற்கு வழிவகுக்கும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பிரச்னை பொது வாக்கெடுப்பு மூலமே தீர்க்கப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டையும் இலங்கை ஜனாதிபதிக்கு எடுத்துரைக்க வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு உதவும் பாரிஸ் கிளப்பிற்கும் உருத்திரகுமாரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதில், இலங்கையின் கடன் மீள் சீரமைப்பையும், மேலதிக நிதி உதவியையும் இலங்கையின் இராணுவ செலவினங்களை குறைப்பதும் சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்புக் கூறலையும் இணைக்கும்படி கேட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பதவி விலகுவது குறித்து யோசிக்கிறார் கெஹலிய

## சுகாதார துறையில் நிதிப் பற்றாக்குறையால்

கொழும்பு, ஜுன் 23

**சுகாதாரத்துறைக்கான நிதிப்பற்றாக்குறை நிலவுவதால் தாம் பதவி விலகுவது குறித்து ஆலோசித்து வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.**



இலவச சுகாதாரத்துறைக்கு வழங்கப்படும் நிதி தொடர்பில் பிரச்னை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதனை நிவர்த்திக்க முடியாவிட்டால் தொடர்ந்தும் பதவி வகிக்க தாம் தயார் இல்லை என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய தெரிவித்தார்.

இதேவேளை, பிரச்னைக்குரிய ஔடதமாக கருதப்படும் மயக்க மருந்து குழந்தைகளுக்கு இதுவரை உட்செலுத்தப்படவில்லை என சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த மயக்க மருந்தானது வயது வந்தவர்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சர் கூறினார்.

பேராதனை போதனா வைத்தியசாலை மற்றும் பேராதனை பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகளில் பயன்படுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய இந்திய தயாரிப்பு மயக்க மருந்தினால் 4 பேர் உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே குறித்த மயக்க மருந்து குழந்தைகளுக்கு இதுவரை உட்செலுத்தப்படவில்லை என அமைச்சர் கெஹலிய குறிப்பிட்டார். (அ)

# சீனா செல்கிறார் அலி சப்ரி

கொழும்பு, ஜுன் 23

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு சீனா செல்லவுள்ளார்.

சீன அரசவை உறுப்பினரும் வெளியுறவு அமைச்சருமான குயின் கேங்கின் அழைப்பின் பேரில், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ள உள்ளார்.

அதன்படி, நாளை முதல் 30 ஆம் திகதி வரை சீனாவுக்கு விஜயம் செய்வார் என இலங்கைக்கான சீனத் தூதரகம் தமது டுவிட்டர் பதிவில் அறிவித்துள்ளது. (அ)

# கடற்படைச் சிப்பாய் ஒருவர் படுக்கையில் சடலமாக மீட்பு!

## தலைமன்னார் பகுதியில் சம்பவம்

மன்னார், ஜுன் 23

கடற்படைச் சிப்பாய் ஒருவர் படுக்கையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தலைமன்னார், ஊருமலை கடற்படை முகாமில் கடமையாற்றிய சிப்பாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனைத் தலைமன்னார் தலைமையகப் பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

கோனாபினுவல பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய தினேஷ் மதுஷான் ஜயசேகர என்ற கடற்படை சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிப்பாய் நேற்று முன் தினம் காலை பணிக்கு வராததால், அதிகாரிகள் அவருடன் பேசுவதற்காக அவர் தூங்கிக்கொண்டிருந்த இடத்துக்குச் சென்றனர்.

இதன்போது அவர் எழுந்திருக்காததால், அவரைப் பரிசோதித்தபோது, அவர் இறந்து கிடந்ததைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

விசாரணைகளை தலைமன்னார் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# முல்லைத்தீவுக்கு செல்கிறார் ரணில்

முல்லைத்தீவு, ஜுன் 23

எதிர்வரும் ஜுலை மாதம் முதல் வாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பதில் அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

முல்லைத்தீவு, மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் வட மாகாணத்துக்கான விசேட தேவையுடையவர்களுக்கான வைத்தியசாலையை ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசேட நடமாடும் சேவை ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக முல்லைத்தீவு மக்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்க உள்ளன-என்றார். (அ)

# இராணுவ பஸ் மோதி 3 வயதுச் சிறுமி பலி!

கொழும்பு, ஜுன் 23

இராணுவத்தினர் பயணித்த பஸ் ஒன்று, ஸ்கூட்டர் ஒன்றுடன் மோதியதில் ஸ்கூட்டரில் பயணித்த மூன்று வயது சிறுமி தலை சிதைவடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவரின் தாயார் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சோக சம்பவம் பண்டாரகம பகுதியில் நேற்று காலை இடம்பெற்றுள்ளது என்று பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான காரியாலயத்தின் கணக்காளரான உயிரிழந்த சிறுமியின் தாயார், சிறுமியுடன் ஸ்கூட்டரில் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, பண்டாரகம கூட்டுறவுச் சங்க அலுவலகத்துக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

களுத்துறையில் இருந்து இராணுவத் தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் பண்டாரகமவில் இருந்து கெஸ்பேவ நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து நேர்ந்துள்ளது என்று பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

விபத்தையடுத்து சிறுமியும் அவரது தாயாரும் பண்டாரகம மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனவும், எனினும் சிறுமி தலை சிதைவடைந்து ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# ஆறு மாதங்களில் 23 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜுன் 23

2023 ஆம் ஆண்டில் இதுவரை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 23 பேர் உயிரிழந்துள்ளதுடன் 17 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

40 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தில் அதிகளவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# உலக வங்கியிடமிருந்து 5.5 மில்லியன் டொலர்கள்

கொழும்பு, ஜுன் 23

ஆரம்ப சுகாதார சேவையை ஒழுங்கமைப்பதற்காக உலக வங்கியின் கடன் வசதியின் கீழ் மேலும் 5.5 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி எதிர்வரும் சில நாட்களுக்குள் இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கும் என சுகாதார அமைச்சின் ஆரம்ப சுகாதார சேவைகள் பிரிவின் உலக வங்கி திட்டப் பணிப்பாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்தார். (அ)

# வாக்காளர்களுக்கு அவகாசம்

கொழும்பு, ஜுன் 23

வாக்காளர் இடாப்பில் பெயர்களை பதிவு செய்வதற்கான கால அவகாசம் கடந்த 16 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்தது. தற்போது அதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலை பதிவு செய்வதற்கான இறுதித் திகதி அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். (அ)



# 22 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜுன் 23

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு அருகே நேற்றுமுன்தினம் இரவு இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் 3 படகையும் அதிலிருந்த 22 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

# அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில் அட்டகாசம் புரிந்த வெளிநாட்டவர் கைது!

யாழ்ப்பாணம், ஜுன் 23

அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில் பொலிஸாருடன் சென்று ரகளையில் ஈடுபட்ட வெளிநாட்டவரொருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அனலைதீவு வைத்தியசாலையில் கடமையில் இருந்த பெண் வைத்தியர் மற்றும் பெண் ஊழியர்களுடன் ரகளையில் ஈடுபட்டதுடன் தளபாடங்களுக்கும் சேதம் விளைவித்தார் என்று சந்தேக நபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அனலைதீவு வைத்தியசாலையில் சில தினங்களுக்கு முன்பு இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சகிதம் சென்ற வெளிநாட்டுப் பிரஜையே இவ்வாறு குழப்பம் விளைவித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து வைத்தியசாலை நிர்வாகத்தால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, வடமாகாண சுகாதார பணிமனை ஆகிய வற்றுக்கு முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் குறித்த விடயம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஆதாரமாக வைத்தியசாலை கண்காணிப்பு கமெராவின் காணொளியும் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் தற்போது வெளிநாட்டுப் பிரஜை கைது செய்யப்பட்டார்.

அவருடன் சென்றார்கள் எனக் கூறப்படும் இரு பொலிஸார் மீதும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.